# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

மலர்:4 | இதழ்:11 | ஆகஸ்ட்:2020 | ரூ.10/– | வருட சந்தா:ரூ.100/–
Volume:4 | Issue:11 | August : 2020 | Rs.10/- | Annual Subs: Rs.100/-






உ

# ஸ்ரீ மஹா மேரு மண்டலி

81/1, மன்னப்பன் தெரு, கோட்டூர், சென்னை – 600 085. தொலைபேசி : 044 – 2447 4744

# சாதுர் மாஸ்ய குரு ஸபர்யா












*5.07.2020* முதல் *02.09.2020* வரை நடைபெறும் சாதுர்மாஸ்ய வ்ரத காலத்தில் பாராயணம் செய்ய வேண்டிய ஸ்தோத்ரங்களைத் தொகுத்து ஸ்ரீ மஹா மேரு மண்டலியால் "சாதுர்மாஸ்ய குரு ஸபர்யா" என்றநூல் அச்சிடப்பட்டு வினியோகிக்கப்பட்டுள்ளது. தக்ஷிணாம்னாய ஸ்ரீ சாரதா பீட சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி ஆன்மீக அன்பர்கள் இந்த பாராயணத்தில் தினந்தோறும் கலந்து கொண்டு ஆச்சார்யர்களின் பூர்ண அனுக்ரஹத்தைப் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஸ்ரீ மஹா மேரு மண்டலியின் "சாதுர்மாஸ்ய ஸபர்யா பாராயணம்" என்றவாட்ஸ்அப் க்ரூப்பில் இணைந்து தினந்தோறும் செய்த பாராயணத்தைப் பதிவிடவும்.

மேலும் விபரங்களுக்கு ஸ்ரீமதி இந்திரா பாலாஜி அவர்களை *94440 60346* என்றஎண்ணில் தொடர்பு கொள்ளவும்.

இப்படிக்கு
நிர்வாக அறங்காவலர், ஸ்ரீ மஹா மேரு மண்டலி

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

### வேதமந்திரம் - 11

**ஓம் தே[1]ஜோஸி தே[1]ஜோ மயி தே[4]ஹி**
**வீரயமஸி வீர்யம் மயி தே[4]ஹி**
**ப[3]லமஸி ப[3]லம் மயி தே[4]ஹி**
**ஓஜோஸி ஓஜோ மயி தே[4]ஹி**
**ஸஹோஸி ஸஹோ மயி தே[4]ஹி**
**ஓம் சாந்தி : சாந்தி: சாந்தி :**

*பொருள்:*

*இறைவா! நீ ஆன்ம சக்தியாக இருக்கிறாய்; எனக்கு ஆன்ம சக்தியைத் தருவாயாக! நீ உடற் சக்தியாக இருக்கிறாய்; எனக்கு உடற் சக்தியைத் தருவாயாக! நீ தெய்வீக ஆயுள் சக்தியாக இருக்கிறாய்; எனக்கு தெய்வீக ஆயுள் சக்தியைத் தருவாயாக! நீ ஆர்வ சக்தியாக இருக்கிறாய்; எனக்கு ஆர்வ சக்தியைத் தருவாயாக! நீ விருப்பச் சக்தியாக இருக்கிறாய்; எனக்கு விருப்பச் சக்தியைத் தருவாயாக!*

*ஓம் சாந்தி:சாந்தி:சாந்தி:*

**வேதபாரதி செய்திகள்**
**(ஆன்மீக மாத இதழ்)**

**மலர்: 4 இதழ்: 11**

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.100 |
| ஆயுள் சந்தா | ரூ.1500 |

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும். சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா
நன்கொடை வழங்கிட

**VEDABHARATHI**
**City Union Bank,**
**Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**

**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**Published on : 1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/19-20 /**
**Valid from 28.02.2019 to 31.12.2020**

# புத்தகத்தின் உள்ளே

| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு.. | 5 |
| ஆவணி மாத விசேஷங்கள் | 7 |
| அட்டைப்பட விளக்கம் | 8 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 11 |
| சுதந்திர தினம் | 13 |
| உட்கதை கூறும் உண்மைகள் | 17 |
| விநாயக சதுர்த்தி | 19 |
| ஸ்ரீ மஹா பெரியவாளின் வாக்கு | 21 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 27 |
| பாரத தேசப் புனித யாத்ரை | 30 |
| புரோஹிதர் | 33 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 35 |
| தர்மத்தின் குரல் | 36 |
| குழந்தைகள் பகுதி | 37 |
| தன்னலமற்ற சேவை | 39 |
| ஸ்ரீ ஸதாசிவப்ரம்மேந்தரரின் திவ்ய சரித்திரம் | 42 |

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் பிரிண்ட்ஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.
போன்: 8939000064

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**

# ஒரு நிமிடம் உங்களோடு.....

*இறந்துபோன சரீரத்தில்* **"மனது"** *கிடையாது.* **"எழுந்திரு"** *என்று அதனிடம் கூறினால் அந்த இறந்த சரீரம் கேட்காது. அனுபவிக்கும் மனதின் சக்தி அந்த சரீரத்திற்கு கிடையாது. சரீரம் கேவலம் மனதை வெளிப்படுத்தும் உபகரணம்தான். ஆனால் நாம் இந்த சரீரம் என்கிற உபகரணத்திற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறோமே அல்லாது மனதிற்கு அல்ல. கேவலம் சரீரத்தைக் குறித்தும் சரீரத்தின் மாற்றங்களைக் குறித்தும் மட்டும் பார்ப்பவர்கள் "மூடர்கள்'' மனதைக் குறித்தும் மனது சம்பந்தப்பட்டதை மட்டும் நினைப்பவர்கள் "ஞானிகள்'' என்கிறார் பகவான்.*

*உயிருடன் இருக்கும் ஒரு சரீரத்தில் "மனது'' இருக்கிறது. அந்த சரீரம் மரணம் அடைந்தால் அதில் "மனது'' கிடையாது. அப்படியானால் உயிருடன் இருக்கும் ஒரு சரீரத்தில் யார் இந்த மனதை பிடித்து நிறுத்துவது? "கேன உபநிஷதம்'' என்ற உபநிஷத்தில் முதல் ஸ்லோகத்தில் சிஷ்யன் கேட்கும் கேள்வி* **"கேனே ஷிதம் பததி ப்ரேஷிதம் மன:''......** *யாரால் இந்த மனம் உணரப்படுகிறது? இங்கு மனதைப்பற்றி கேள்வி கேட்கப்படுகிறது. சரீரத்தைப் பற்றியல்ல. அப்படியானல் மனதை பிடித்து நிறுத்துவது யார்? என்பதை நம் ரிஷிகள் கண்டுபிடித்தார்கள்.*

**கீதையில் பகவான் அழகாக கூறுகிறார்**

**ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸன்னிவிஷ்டோ**

**மத்த: ஸம்ருதிர் ஞானமபோஹனம் ச/ ........**

*(கீதை 15-15)*

*"எல்லோருடைய உள்ளத்திலும் நான் வீற்றிருக்கிறேன். நினைவும் ஞானமும் அவற்றின் அழிவும் என்னிடமிருந்துதான் உண்டாகின்றன.*

*நாம் யாரையாவது பார்த்தால் "உங்களை எங்கேயோ*

பார்த்திருக்கிறேன் நன்றாக ஞாபகம் இல்லை'' என்று யோசிக்கிறோம். அப்படி யோசிப்பது நம் சரீரத்தால் அல்ல நம்முடைய மனதுதான். இவை எல்லாம் நடப்பது நம் மனதில்தான். இந்த ஞாபக சக்தி, மறதி, அறிவு எல்லாம் என்னிடத்தில்தான் இருக்கிறது என்று பகவான் கூறுகிறார் என்றால் இவற்றை நம் மனதில் பிடித்து நிறுத்துவது பகவான்தான்.

"நான் யார்'' என்று பகவானே அதே கீதையில் அழகாக கூறுகிறார்.....

**அகத்மா குடாகேச ஸர்வபூதாசயஸ்தித**

**அஹமாதிஸ்ச மத்யம் ச பூதானாமந்த ஏவ ச**

**(கீதை 10-20)**

**பொருள் :** விழிப்புடையோய், எல்லா உயிர்களின் உள்ளத்து உறையும் ஆத்மா நானே. உயிர்களின் ஆதியும் இடையும், இறுதியும் நானே.

''நான் யார்'' என்று கூறும்போது பகவான் தன்னை சங்கு சக்ரகதாதாரி என்றோ புல்லாங்குழல் ஊதுபவன் என்றோ பசுவுடன் இருப்பவன் என்றோ கூறவில்லை. நான் எல்லோருடைய உள்ளேயும் **"ஆத்மா''** வாக இருக்கிறேன் என்றார்.

நம்முடைய **"மனது''** பகவான் குடிகொள்ளும் இடம் இப்படிப்பட்ட மனதையும் அதன் சக்தியையும் நாம் நல்லவிதத்தில் பிரயோஜனப்படுத்தினால் நாம் பகவானிடம் போய் சேரலாம்.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

# ஆவணி மாத விசேஷங்கள்

**(ஆகஸ்ட் 17.08.2020 முதல் செப்டம்பர் 16.09.2020 வரை)**

| | | | |
|---|---|---|---|
| *17.08.2020* | *ஆவ 1* | *திங்கள்* | *சிவராத்திரி* |
| *18.08.2020* | *ஆவ 3* | *செவ்வாய்* | *அமாவாசை* |
| *22.08.2020* | *ஆவ 6* | *சனி* | *ஸ்ரீ விநாயக சதுர்த்தி, ஸாம வேத உபாகர்மா* |
| *24.08.2020* | *ஆவ 8* | *திங்கள்* | *சஷ்டி* |
| *25.08.2020* | *ஆவ 9* | *செவ்வாய்* | *திருமுருக கிருபானந்தவாரியார் பிறந்தநாள்* |
| *28.08.2020* | *ஆவ 12* | *வெள்ளி* | *ஆவணி மூலம்* |
| *29.08.2020* | *ஆவ 13* | *சனி* | *ஏகாதசி* |
| *31.08.2020* | *ஆவ 15* | *திங்கள்* | *ஓணம் பண்டிகை* |
| *01.09.2020* | *ஆவ 16* | *செவ்வாய்* | *பௌர்ணமி விரதம்* |
| *02.09.2020* | *ஆவ 17* | *புதன்* | *பௌர்ணமி மஹாளயபட்சம் ஆரம்பம்* |
| *06.09.2020* | *ஆவ 21* | *ஞாயிறு* | *சதுர்த்தி* |
| *07.09.2020* | *ஆவ 22* | *திங்கள்* | *மஹாபரணி* |
| *08.09.2020* | *ஆவ 23* | *செவ்வாய்* | *சஷ்டி* |
| *13.09.2020* | *ஆவ 28* | *ஞாயிறு* | *ஏகாதசி* |
| *14.09.2020* | *ஆவ 29* | *திங்கள்* | *துவாதசி, மருதாநல்லூர் ஸத்குரு ஸ்வாமிகள் ஆராதனை* |
| *15.09.2020* | *ஆவ 30* | *செவ்வாய்* | *சிவராத்திரி* |

## 18.08.2020 செவ்வாய் - அமாவாஸை

*ஸ்ரீ ஸார்வரி நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே வருஷ ருதௌ ஸிம்மமாஸே க்ருஷ்ணபக்ஷே சதுர்தச்யாம் உபரி அமாவாஸ்யாம் புண்யதிதௌ வாஸர: அத்ய பௌம வாஸர யுக்தாயாம் ஆஸ்லேஷா நக்ஷத்திர யுக்தாயாம் விஷ்ணுயோக விஷ்ணுகரண ஸர்வ ஏவம் குண விஸேஷன விசிஷ்டாயாம் அஸ்யாம். அமாவாஸ்ய புண்யகாலே தர்ச ஸ்ராத்தம் தில தர்ப்பண ரூபணே அத்ய கரிஷ்யே.*

# அட்டைப்பட விளக்கம்

## திருமுருக கிருபானந்த வாரியார்

## (1906 - 1993)

*ஒரு மனிதனை உயர்த்துவது பணமோ, அவன் வகிக்கும் பதவியோ, குலமோ, அவனுடைய பருமனான அல்லது உயரமான உடலோ அல்ல. அவனை உயர்த்துவது அறிவு ஒன்றுதான்.* **“அறிவுடையார் எல்லாம் உடையார்”** *என்றார் வள்ளுவர்.*

*தமிழ்நாடு வேலூர் மாவட்டத்தில் காட்பாடிக்கு அருகில் பாலாற்றங்கரையில் அமைந்துள்ளது.* **“காங்கேய நல்லூர்”** *என்கிறகிராமம், இந்த கிராமத்தில் வசித்துவந்தவர் செங்குந்த வீர சைவ மரபில் வந்த திருமல்லையதாசர். இவர் இசையிலும், இயலிலும் வல்லவர். மாபெரும் புராண வல்லுநர், முருக பக்தர். இவருடைய மனைவி பெயர் கனகவல்லி, இவர்களுக்கு பதினொரு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் 1906 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் தேதி நான்காவது மகனாக பிறந்தவர் திருமுருக கிருபானந்தவாரியார். இவரது பெற்றோர்கள் இவருக்கு* **“கிருபானந்த வாரி”** *என்னும் பெயரைச் சூட்டினார்கள்.* **“கிருபை”** *என்றால் கருணை,* **“ஆனந்தம்”** *என்றால் இன்பம்,* **“வாரி”** *என்றால் பெருங்கடல் என்று பொருள். இவரது தந்தையே இவருக்கு முதல் குரு.*

*இவரது ஐந்தாவது வயதில் வீர சைவ குல முறைப்படி திருவண்ணாமலையில் உள்ள பாணிபாத்திர தேவர் மடத்தில் “சிவலிங்க தாரணம்” செய்விக்கப்பட்டார். தனது தந்தையிடமே “சடாக்ஷர” மந்திரம் உபதேசம் பெற்று பின் அவரது தந்தையின் குருவான மதுரை திருப்புகழ் சுவாமிகளிடம் “சூட்க்ஷமசடாக்ஷர” மந்திரத்தை உபதேசம் பெற்றார். அதன் பின் பழநிஈசனான சிவாச்சாரியரிடம் நிர்வாண தீட்க்ஷை ஏற்று “வாம தேவ சிவம்” என்றதீக்ஷாநாமமும் பெற்றார். எட்டு வயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றஇவர் தேவாரம், திருப்புகழ், திருவருட்பா,*

கந்தபுராணம், கம்பராமாயணம், வில்லி பாரதம் முதலான நூல்களில் பத்தாயிரம் பாடல்களுக்கு மேல் மனப்பாடம் செய்துவிட்டார். கற்றறிந்த புலவருக்கே கடினமாக இருக்கும் அஷ்டநாக பந்தம், மயில், வேல், சிவலிங்கம், ரதம் முதலான பந்தங்கள், சித்திரக் கவிகள் முதலியவைகளை இயற்றினார்.

தம்முடைய 19-வது வயதில் அமிர்தலக்ஷ்மியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். பிரம்மச்சர்யத்தைக் கடைபிடித்ததால் அவர்களுக்கு குழந்தை இல்லை. தமது வாழ்வில் ஒரு நாள் கூட முருக வழிபாடு செய்யாமல் உணவு அருந்தியது கிடையாது.

தமிழ் இலக்கியம் மற்றும் இந்து சமய ஆன்மீகச் சொற்பொழிவில் தனக்கு என தனிப் பெயரை ஏற்படுத்திக் கொண்ட மிகச் சிறந்த சொற்பொழிவாளர், அவருடைய சொற்பொழிவுகள் நாடக பாணியில் இருக்கும். இவர் சொற்பொழிவாற்றும் கூட்டங்களில் சிறு பிள்ளைகள்தான் முன் வரிசையில் அமர்ந்திருப்பார்கள். சொற்பொழிவின் இடையிடையே அவர்களிடம் எளிமையான கேள்விகளைக் கேட்பார். அந்த கேள்விகளுக்கு முதலில் பதில் அளிக்கும் சிறு பிள்ளைக்கு விபூதியும் சிறிய கந்தசஷ்டிக் கவசப் புத்தகமும் பரிசாக அளிப்பார். இவருடைய பேச்சில் நகைச்சுவை அதிகம் இருக்கும். 1965 ஆம் ஆண்டு திருவிளையாடல் படம் வெளியான கால கட்டம். ஒரு சொற்பொழிவில் **“முருகனின் அப்பா யார்?”** என்று குழந்தைகளைக் கேட்டார். எப்படியாவது அவரிடமிருந்து பரிசை பெற்றுவிட வேண்டும் என்றஆர்வத்தில் ஒரு சிறுவன் எழுந்து “சிவாஜி” என்று பதில் அளித்தான். அதைக்கேட்ட அரங்கமே சிரித்தது. தவறு செய்துவிட்டோம் என்று மனம் வருந்தி நின்றஅந்த சிறுவனை அழைத்து பரிசை கொடுத்து பாராட்டி, கூட்டத்தைப் பார்த்து “ஏன் சிரிக்கிறீர்கள், அவன் சரியாகத்தான் சொன்னான்'' என்று கூறி ஒரு விளக்கத்தையும் அளித்தார். **“முருகனின் அப்பா சிவபெருமான். நாம் மற்றவர்களை மரியாதையாக அழைக்கும்போது காந்திஜி,**

**நேருஜி, ராஜாஜி என்று "ஜி" போட்டு அழைக்கிறோம். அதுபோல் இந்த சிறுவனும் "சிவாஜி என்று சிவனை "ஜி" போட்டு மரியாதையாக அழைத்திருக்கிறான்** *என்றார். அதைக் கேட்ட அரங்கமே அதிர்ந்தது.*

*இவருடைய கூட்டத்தில் பெண்கள் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கும். பெண்களைக் குறைவாக பேசுவதை வாரியார் விரும்பமாட்டார். குழந்தைகளுக்குப் பெற்றதாயின் பெயரை முதலெழுத்தாக (இன்சியலாக) போட வேண்டும் என்று பெண்களை முன்னிறுத்தும் கருத்தை முதன் முதலாக கூறினார். இந்தியா மட்டுமில்லாமல் இலங்கை, சிங்கப்பூர், மலேஷியா போன்ற வெளிநாடுகளிலும் சிறப்பான சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். 500-க்கும் மேற்பட்ட ஆன்மீக மணம் கமழும் கட்டுரைகளை எழுதியுள்ளார். பல்கலை கழகங்களில் ஏராளமான பட்டங்களையும் பெற்றுள்ளார். இவரை 64வது நாயன்மார் என்றேஅழைப்பார்கள்.*

*1993-ம் ஆண்டு அக்டோபர் 19-ம் தேதி தமது 87வது வயதில் வாரியார் இலண்டன் பயணம் மேற்கொண்டார். 1993 நவம்பர் 7-ம் தேதி இந்தியா திரும்பிக் கொண்டிருந்த போது (விமானத்திலேயே) வானுலகத்திலேயே கந்தனோடு ஐக்கியமானது அந்த கந்தர்வ குரல். இவருடைய சொந்த ஊரான "காங்கேய நல்லூரில்" இவரை சிறப்பிக்கும் வகையில் கோயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.*

**25.08.2020 செவ்வாய்க்கிழமை அன்று அவருடைய 115வது பிறந்தநாள்.** *அன்றைய தினம் அவரை நினைவுகூர்வோமாக.*

• *தொகுப்பு :* **டி. சூரியநாராயணன்**

---

## "வேதாந்த ப்ரபோதம்" புத்தகம்

*நம் பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் அருளியது. தற்போது கிரி டிரேடிங் நிறுவனத்தினர் அழகான வடிவத்தில் வெளியிட்டுள்ளார்கள். வேதபாரதி மூலம் பெறுவோர்க்கு சிறப்பு சலுகை உண்டு.*

*தொடர்புக்கு :* **9444445156 / 97909 20672**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,

ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 16



**அத்தியாயம் – 1**

ஸ்ரீபகவத் கீதையின் முதல் அத்தியாயத்தின் பெயர் **"அர்ஜுன விஷாத யோகம்". "விஷாத"** என்றால் மனச்சோர்வு, துக்கம், குழப்பம், சந்தேகம் என்று பொருள். **"யோகம்"** என்றால் ஒரு நெறிமுறைபட்ட வழியின் மூலம் குறிக்கோளை அடைவது என்று பொருள். அர்ஜுனனுக்கு இந்த அத்தியாயத்தில் மனக்குழப்பம் ஏற்படுகிறது. அவனுக்கு குழப்பம் ஏற்பட்டதால்தான் நமக்கு கீதை கிடைத்தது.

இதில் மொத்தம் 47 ஸ்லோகங்கள் உள்ளன. இவற்றில் ஒரு ஸ்லோகத்தை மட்டும் கௌரவர்களின் தந்தையான த்ருதராஷ்ட்ரரும் (18 அத்தியாயங்களிலும் இவர் ஸ்லோகம் மட்டும் கூறுகிறார்) 21 ஸ்லோகங்களை அர்ஜுனனும், 25 ஸ்லோகங்களை ஸஞ்சயனும் சொன்னார்கள். இந்த அத்தியாயத்தில் மட்டும்தான் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் ஒன்றுமே கூறவில்லை. த்ருதராஷ்டருக்கு கண் பார்வை இல்லாததால் ஸஞ்சயன் மூலம் யுத்தகளத்தில் நடப்பவைகளை கேட்டு தெரிந்துகொள்கிறார். கீதையின் முதல் ஸ்லோகத்தை த்ருதராஷ்ட்ரர் சொல்கிறார்.

**தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ:/**
**மாமக : பாண்டவாஸ்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய//**

ஓ ஸஞ்ஜயா தர்ம க்ஷேத்திரமாகிய குரு க்ஷேத்திரத்தில் யுத்தம் செய்ய விரும்பித் திரண்ட நம்மவர்களும் பாண்டவர்களும் என்னதான் செய்கிறார்கள்?

*2வது ஸ்லோகத்திலிருந்து 20வது ஸ்லோகம் வரையிலும் இரு கட்சியினரும் அணிவகுத்திருப்பதை ஸஞ்ஜயன் விளக்குகிறான். ஸ்லோகம் 2 முதல் 6 வரை கௌரவர்களின் தலைவனான துரியோதனன் குலகுருவான துரோணரை அணுகி பாண்டவர்களின் அணியில் இருக்கும் ஆற்றல் மிக்க வீரர்களின் பட்டியல் ஒன்றைவிவரிக்கிறான். 7.8.9 ஆகிய மூன்று ஸ்லோகங்களில் பீஷ்மரின் தலைமையில் அணிவகுத்து நிற்கும் தனது படைத் தளபதிகளின் பெயர்களை துரியோதனன் விளக்குகிறான். 10வது ஸ்லோகத்தில் பாண்டவர்களின் அணிதான் பலம் வாய்ந்தது என்று கூறுகிறான்.*

*துரியோதனுடைய உள்ளத்தில் அச்சம் குடிகொண்டுவிட்டது. துரியோதனனின் சோர்வை அறிந்த பீஷ்மர் துரியோதனனுக்கு உற்சாகத்தை ஊட்ட உரக்க சிம்மநாதம் செய்து தனது சங்கை எடுத்து ஊதினார். அவரைத் தொடர்ந்து கௌரவ படையினர் சங்குகளை ஊதி முழங்கினார்கள். பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய* **“பாஞ்சஜன்யம்”** *என்னும் சங்கை ஊதினார். தொடர்ந்து அர்ஜுனன்* **“தேவதத்தம்”** *என்றசங்கை ஊதினான். அதன் பின் வீர சாகசங்களை புரியும் பீமன்* **“பௌண்ட்ரம்”** *என்றசங்கையும், குந்தியின் புதல்வனான மன்னன் யுதிஷ்டிரன்* **“அனந்த விஜயம்”** *என்றசங்கையும் ஊதினார்கள். அடுத்து நகுலனும் சஹாதேவனும் முறையே* **“சுகோஷம்” “மணிபுஷ்பகம்”** *என்றபெயருடைய தங்களுடைய சங்குகளை ஊதினார்கள். அதன் பின் காசிராஜன், போர் வீரனான “சிகண்டி”, ஸாத்யகி, துருபதன், சுபத்ரை மகனான “அபிமன்யு” ஆகியோர் தத்தம் சங்குகளை ஊதினார்கள்.*

*சங்கொலிகளின் பல்வேறு முழக்கங்கள் பேரொலியாக எழுந்து பூமியும், வானமும் நடுங்குமாறு எதிரொலிக்க த்ருதராஷ்டிரனின் மகன்களுடைய இதயங்கள் சிதறலாயின. இப்படி 8 ஸ்லோகங்கள் போர்க்களத்தில் எழுந்த பேரிரைச்சலை விவரிக்கின்றன.*

*20வது ஸ்லோகம் ஹனுமான் கொடியை உடைய தேரில் அமர்ந்த பாண்டுவின் மகன் அர்ஜுனன் த்ருதராஷ்டிரரின் மகன்களை நோக்கி அம்பெய்ய தயாராகி காண்டீபம் என்ற வில்லை கையில் எடுத்துக் கொண்டான்.*

*முதல் அத்தியாயம் தொடரும்.*

# சுதந்திர தினம்



74ம் ஆண்டு சுதந்திர தினம் கொண்டாடப்படும் மாதம் இது. நாம் நமது தேசம் பற்றி சிந்திப்போம், செயல்படவும் முயற்சிப்போம். 69 வயதில் நமது பாரத தேசப் பிரதமர் திரு. மோடி அவர்கள், மெய்வருத்தம் பாராமல் லடாக் உச்சிக்குச் சென்று நமது ராணுவ வீரர்களுக்கு ஊக்கமளித்துள்ளார். ரொம்பவும் பெருமைப்படுகிறோம். சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே பயமுறுத்திக் கொண்டிருக்கும் போரை தவிர்ப்பதற்கு இயன்றவரையில் போராடிக் கொண்டிருக்கிறார். அதே சமயத்தில் போரை சந்திக்கவும் நமது ராணுவத்தை பலப்படுத்திக் கொண்டிருக்கிறார். அவருடைய இதயத்திற்குள் இந்த தேசத்தின் பாதுகாப்பிற்கான சிந்தனைகள் அதனது ஒவ்வொரு திசுவிற்குள்ளும் துடித்துக் கொண்டிருக்கிறது. அது மட்டுமா? உள்நாட்டுப் போர் போல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொரோனா எதிர்ப்புப் போராட்டம் வேறு அவரை மற்றொரு பக்கத்தில் வாட்டிக் கொண்டிருக்கிறது. இதெல்லாம் போதாது என்று சுயநலம் மிகுந்த எதிர்கட்சித் தலைவர்கள் அவரை எந்த வகையிலெல்லாம் பலவீனப்படுத்த முடியுமோ அந்த வகையிலெல்லாம் அவரோடு பரம எதிரிகளைப் போல் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் ஒரு ராணுவ வீரரின் தாழ்மையான விண்ணப்பம் வாட்ஸ் அப்பில் வந்தது. அதில் அவர், இந்திய எல்லையின் மலைப்பாதை ஒன்றில் நின்று கொண்டு பேசுகிறார். சுற்றிலும் பனிபடர்ந்திருக்க, அவர் முதுகில் பாரம் சுமந்தபடியே, தன் முன் இருக்கும் பாதையைக் காண்பித்து, "இனி இந்த கடினப்

*பாதையில், நாங்கள் நடந்துதான் செல்ல வேண்டும். அவர் குரல் தழுதழுக்கிறது. "வீடு, மனைவி, குழந்தைகள், உறவினர், பெற்றோர் எல்லாம் துறந்து வந்துள்ளோம். உயிரோடு திரும்புவோமா தெரியாது. எங்கள் குடும்பங்களை உங்களை நம்பிவிட்டு வந்திருக்கிறோம். இந்த தேசம் மற்றும் உங்களின் பாதுகாப்பிற்காக நாங்கள் போராடுகிறோம். நீங்கள் செய்ய வேண்டியது உங்கள் விரல் நுனியில் இருக்கிறது. சீனப் பொருள்களை பகிஷ்கரியுங்கள். உங்கள் இல்லத்தில் வசதியாக இருந்து கொண்டே, சீனத் தொடர்புகளைத் (டிக்டாக் மற்றும் அரசாங்கம் சொல்லியுள்ள வலைகளின் பயன்பாட்டை) துண்டித்துக் கொள்ளுங்கள் ப்ளீஸ்'', என்கிறார். அவரது கண்கள் பனித்துப் பளபளக்கிறது. இதயத்து வேதனை அந்தக் கண்ணில் பளிச்சென்று தெரிகிறது.*

*நம்மால் எதாவது செய்வதற்கு முடியுமா? முடியும். சீனப் பொருட்களை வாங்காமல் இருப்பது அவர்களை பொருளாதார ரீதியாக பலவீனப்படுத்துவதாகும். சீன வலைத்தளங்களை பயன்படுத்தாமல் இருப்பது, நம் தேசத்து மக்களின் தனிப்பட்ட விவரங்கள் அவர்களை எட்டாமல் இருப்பதற்கு உதவும். வெள்ளையனை வெளியேற்ற நம் முன்னோர்கள் இதைத்தானே செய்தார்கள்! அயல்நாட்டுப் பொருட்களை பகிஷ்கரித்தார்கள், அந்நியர்களை எதிர்த்தார்கள், சுதேசி பொருட்களை ஊக்குவித்தார்கள். இன்று நம் குழந்தைகளுக்கு நாம் முன்னோடியாக இருந்து காட்ட வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.*

*மகாபெரியவாளின் "பிடியரிசிதிட்டம்'' போல் ஒவ்வொரு வீட்டின் பிடியரிசியும் சேர்ந்தால் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் பயன்பெறும் அல்லவா? அவ்வாறே இன்றைய நமது தலையாய கடமை இந்த தேசத்தின் நலனுக்காக தங்கள் உயிரைப் பணயம் வைத்து இந்திய எல்லையில் சீன எதிரிகளுடன் போராடிக்கொண்டிருக்கும் நமது வீர ஜவான்களுக்கு நம்மால் ஆன உதவிகளை நாம் செய்ய வேண்டும்.*

**'FOR YOUR TOMORROW, WE GIVE OUR TODAY'** *என்பது ராணுவ வீரர்களின் சத்தியவாக்கு. நமது ராணுவம் உலகத்தின் மூன்றாவது மிகப் பெரிய ராணுவம். இதில் தலை சிறந்த வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். நமக்காக இவர்கள் உழைக்கிறார்கள், இவர்களுக்காக இவர்களின் குடும்பம் குழந்தைகளின் நலனுக்காக நாம் சிறிது உழைத்தால் என்ன?*

*நமது பிரதமர் "இந்த வீர ஜவான்களுக்காக 130 கோடி ஜனத்தொகை கொண்ட நம் நாட்டின் பிரஜைகள் ஒவ்வொருவரும் ஒரு ரூபாய் கொடுத்தால் 130 கோடி ரூபாய் கிடைத்து நமது ராணுவ பலத்தை மேலும் பன்மடங்கு அதிகரிக்கச் செய்யலாம்" என்றார். அதனைக் கேட்டுவிட்டு எத்தனை பேர்கள் இயங்கியிருப்பார்கள்? உங்கள் மனதை நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். இப்போதும் முயற்சிக்கலாம். இந்திய ராணுவத்திற்கு நாம் மிகச் சுலபமான 5 வழிகளில் நம்மால் முடிந்த நன்கொடையை செலுத்தலாம். இவைகளை நீங்கள் கூகுள் தேடு தளத்தின் மூலம் அணுகலாம்.*

*இனி ஐந்து வழிகளைப் பார்க்கலாம் :*

**1. NATIONAL DEFENCE FUND FOR THE WELFARE OF ARMED FORCES: (NDF)**

*இதன் மூலம் நன்கொடை செலுத்துவதற்கு,* NDFWEBSITE, SBIWEBSITE *மற்றும்* PMINDIAPORTAL *களை கவனித்து விவரம் அறிந்து* DD *மூலமோ ஆன்லைன் மூலமோ அனுப்பி வைக்கலாம்.*

2. **ARMY WELFARE FUND BATTLE CASUALTIES, 3. ARMY CENTRAL WELFARE FUND**

*இந்த இரண்டு திட்டங்களையும் அப்படியே கூகுள் தேடு தளத்தில் டைப் செய்தால் நன்கொடை செலுத்துவதற்கான வங்கி கணக்கு விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும்.*

4. **PARA LEGIC REHABILITAION CENTRE, KIRKEE:**

*இந்திய ராணுவத்தில் போர் மற்றும் போர் பயிற்சிகளின் போது முதுகெலும்பு முறிவுகள் ஏற்பட்டு அதற்கான சிகிச்சைகள்*

*அளிக்கப்பட்டு வரும் வீரர்களுக்கு இந்த நன்கொடை பயன்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தையும் கூகுள் தேடுதளத்தில் டைப் செய்து நன்கொடைகள் செலுத்துவதற்கான விவரங்களைப் பெறலாம்.*

5. **BHARATH KE VEER (INDIA'S BRAVE HEARTS):**

*போர்களில் மரணமடைந்த வீர ஜவான்களின் விதவைகள், குழந்தைகள், குடும்பங்கள் ஆகியோரின் நலனுக்காகவும், எதிர்காலத்திற்காகவும் இந்த நன்கொடை பயன்படுத்தப் படுகிறது. ஒரு குறிப்பிட்ட வீரருக்கெனவும் நமது நன்கொடையை செலுத்தும் வசதி இருக்கிறது. ஆனால் தனி ஒருவருக்கு நன்கொடைகள் 15 லட்சத்திற்கு மேல் அனுமதிப்பதில்லை என்றஅறிவிப்பும் இருக்கிறது. இத்திட்டத்திற்குத்தான் நான் முதன் முறையாக எனது சிறு நன்கொடையை ஆன்லைன் மூலம் அனுப்பிவைத்தேன். ஆனால் அடுத்த நொடியிலேயே என் மின் அஞ்சலுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தொகைக்கான ரசீது (சான்றிதழ்) வந்தபோது பிரமித்துவிட்டேன். அது சாதாரண ரசீது அல்ல இந்திய தேசத்தின் முத்திரை பதித்த அந்த கம்பீரமான சான்றிதழில் நன்றி வார்த்தைகளுடன் என் பெயரையும் பார்த்த போது, ஏதோ சாதித்துவிட்டதைப் போல் உணர்ந்தேன். அதன் பிறகு ஒவ்வொரு வருடமும் இதனை வழக்கமாக்கிக் கொண்டேன். நமக்குள் தேசப்பற்று எனும் விதை விழுந்து, விருட்சமாக வளருவதற்கு இது மிகவும் உதவியாக இருக்கிறது.*

*உங்கள் குழந்தைகளுக்கு காட்டுங்கள்! தேச பக்தியை அவர்களுக்குள் வேர்விடச் செய்யுங்கள்! இதுவே உங்களின் சுதந்திரதினத் தீர்மானமாக இருக்கட்டும்!*

**வந்தேமாதரம்! ஜெய்ஹிந்த்!**

**- டாக்டர் ஷ்யாமா ஸ்வாமிநாதன்.**

# உட்கதைகள் கூறும் உண்மைகள்

*ஏன் மஹாபாரத, இராமாயண இதிகாசங்களில் உள்ள உட்பொருளை வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்கு இக்கதை ஒரு சான்று.*

*அர்ஜுனனின் காண்டீப அஸ்திரம் பிரம்ம தேவனால் உருவாக்கப்பட்டு, அக்னி தேவனின் ஆசியுடன் வாயுதேவனிடம் இருந்து அர்ஜுனனுக்கு வழங்கப்பட்டது. அப்பேற்பட்ட காண்டீபத்தை எவரேனும் இகழ்ந்தால், இகழ்ந்தவரின் உயிர் மாய்க்கப்பட வேண்டும் அல்லது அர்ஜுனன் தனது உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்பது அர்ஜுனன் செய்த சத்தியம்.*

*மஹாபாரதப் போர் நடந்துகொண்டிருக்கும் சமயம் அது. சோதனை காலத்தின் போது நம் வாய்தவறி எவற்றையாவது குறைசொல்வது போல், தர்மர் சட்டென்று ஒரு கணம் காண்டீபத்தை இழிவாக பேசி விடுகின்றார். செய்வதறியாது பதறினான் அர்ஜுனன். சத்தியமே சாசனம் அல்லவா! என்ன செய்வான் அர்ஜுனன்? தர்மனை கொல்வதா இல்லை தன்னையே மாய்த்துக் கொள்வதா?*

*இந்த அசாதாரண சூழ்நிலையில் அர்ஜுனன் யாரிடம் செல்வான்? ஆம் நீங்கள் நினைப்பது சரி தான். கண்ணனைத் தவிர வேறு யார் இதை சரி செய்ய முடியும்? கண்ணன் சிரித்துக்கொண்டே*

*'அர்ஜுனா, அரசவையில் மத்தியில் நின்று உன்னைப் பற்றியே புகழ்ந்து பேசு'' என்றார்.*

*அர்ஜுனனுக்கோ உடம்பெல்லாம் கூசியது.*

*'என்ன சொல்கிறாய் கண்ணா? அது எப்படி என்னைப் பற்றியே நானே புகழ்ச்சியாக கூறிக் கொள்ள முடியும்'' என்றான்.*

*'அர்ஜுனா, சொல்வதைக் கேள்!!'' என்றான் கண்ணன்.*

*உடனே அர்ஜுனன் கட்டளையை ஏற்று சபையில் தற்புகழ்ச்சியாக பேசி முடித்தான்.*

*'அர்ஜுனா, என்ன புரிந்தது உனக்கு?'' என்றான்*

*கண்ணன்.*

*'கண்ணா, தற்புகழ்ச்சியாக பேசுவது என்னை நானே மாய்த்துக் கொள்வது போல இருந்தது" என்றான் அர்ஜுனன்.*

*'உன் சத்தியம் ஜெயித்தது" என்றான் கண்ணன்.*

*இந்த உண்மையை கண்ணன் அர்ஜுனனுக்கு மட்டுமா கூறினான்?*

*இது எல்லோருடைய சிந்தனைக்கும் தான்.*

*தற்புகழ்ச்சியால் கல்வி தாழ்ந்துவிடும். தற்புகழ்ச்சியை "எரியும் நெருப்பிலே நீரை வார்த்து வளர்ப்பதைப் போலே" என்கிறார் ஔவைப் பாட்டி.*

**'அறிதோறு அறியாமை கண்டற்றால்"** *எனக் கூறும் வள்ளுவரோ* **"நூற் பொருளை அறிய அறிய அறியாதமையைக் கண்டாற் போலே"** *அதாவது எந்தக் கலையோ, நூலோ அறிய ஆரம்பித்தால் தான் அறியாதது கடல் என விளங்கும். இந்த உண்மை விளங்கினால் தற்புகழ்ச்சிக்கு ஏது இடம். அறிவால் மேம்பட்டவர்கள் அதற்கு இடம் கொடுப்பதில்லை.*

*உட்கதைகளில் உள்ள உண்மைகளும், அறங்களும் காலங்கள் கடந்தவை!!*

**வெ. சிவசங்கரி**

**ஜாதக பரிவர்த்தனைக்கு அணுகவும் :**

*எண்.9, பழனி ஆண்டவர் தெரு,*
*ராதாநகர், குரோம்பேட், சென்னை - 600 044.*

| திருமதி. தனலட்சுமி | திருமதி. ராஜலட்சுமி |
|---|---|
| 9444140119 | 7092199447 |

**ஜாதக பரிவர்த்தனைக்கு**

புதுவையில் பதிவு செய்ய விரும்புவோர் அணுகவும் :

**ஸ்ரீ பாலசுப்பிரமணியன்**
**9442094380**

**ஸ்ரீ நடராஜன்**
**9443103404**

# விநாயக சதுர்த்தி
# 22.08.2020 – சனிக்கிழமை

**ஓம் சுமுகாய நம : ஓம் ஏகதந்தாய நம : ஓம் கபிலாய நம:**

**ஓம் கஜகர்ணகாய நம: ஓம் லம்போதராய நம: ஓம் விகடாய நம:**

**ஓம் விக்னராஜாய நம : ஓம் விநாயகாய நம: ஓம் தூமகேதவே நம:**

**ஓம் கணாத்யக்ஷாய நம : ஓம் பாலசந்த்ராய நம: ஓம் கஜாநநாய நம:**

**ஓம் வக்ரதுண்டாய நம: ஓம் சூர்ப்பகர்ணாய நம: ஓம் ஹேரம்பாய நம:**

**ஓம் ஸ்கந்தபூர்வஜாய நம:**

*நம் வீடுகளில் நடக்கும் கல்யாணம் போன்றஎல்லா சுபகாரியங்களிலும் வருடம் பூராவும் நாம் கொண்டாடும் பண்டிகைகளிலும் பூஜை ஆரம்பிக்கும்போது முதலில் மஞ்சள் தூளை தண்ணீரில் கலந்து பிடித்துவைத்து அதை விநாயகராக பாவித்து மேற்கண்ட விநாயகருக்குரிய ஷோடச நாமாக்களை (16 பெயர்களை) கூறி புஷ்பத்தால் அர்ச்சனை செய்தபிறகுதான் மற்ற பூஜைகளையும், விசேஷங்களையும் ஆரம்பிப்போம்' மேற்கண்ட 16 நாமாக்களும் விநாயகரின் நாமாக்கள்.*

*இந்த ஸ்லோகத்தை அல்லது நாமாக்களை எழுதியது யார்? அல்லது கூறியது யார்?*

*வேதங்களை ருக், யஜுர், சாம, அதர்வண என நான்கு வகைப்படுத்தி அதனால் "வேதவியாசர்" என்னும் பெயரை பெற்ற"வாதநாராயணர்" ஒரு சமயம் சனத்குமாரர்களிடம் சென்று பதினெண் புராணங்களையும் கற்றுத் தேர்ந்து அவைகளை மக்கள் எளிதாக புரிந்து கொள்ளத்தக்க விதமாக ஸ்லோக ரூபமாக அமைக்கும் இலக்கிய பணியில் இறங்கினார். ஆனால் வியாசருக்கு எண்ணிய பொருள்கள் ஒன்றும் தெளிவாகத் தோன்றவில்லை. எல்லாவற்றிலும் விக்னங்கள் தோன்றின. ஒரு ஸ்லோகத்தையாவது ஒழுங்காக பாட முடியவில்லை. எதை எழுதுவது என்று தெரியாமல் குழம்பினார்.*

*ஏன் இந்த தடுமாற்றம்? ஏன் இந்த சித்த குழப்பம். இதன் காரணம் என்ன? என்று அறிய விரும்பி சத்திய லோகம் சென்று "பிரம்மதேவரை" நமஸ்கரித்து விவரங்களை கூறினார். பிரம்ம தேவர் சிறிது நேரம் தியானித்து பிறகு ஞானதிருஷ்டியால் காரணத்தைத் தெரிந்துக்கொண்டு வேத வியாசரை*

புன்சிரிப்போடு பார்த்து “வியாசனே அநாதியாகவும், நிர்மலமாகவும், அகண்ட ஆனந்த உருவாகவும், பிரணவ சொரூபியாகவும் முழு முதற் கடவுளாகவும் விளங்கும் விநாயகரை முதலில் நினைத்து வணங்காததால்தான் உனக்கு இவ்வளவு மனக்குழப்பமும், இடையூறுகளும் ஏற்பட்டுள்ளது. இனியாவது அந்த யானை முகத்து விநாயகரை வணங்கி பூஜை செய். அவரை பூஜை செய்ய மந்திரங்களை சொல்கிறேன் என்று கூறி மேற்கண்ட மந்திரங்களைக் கூறினார்.

பிரம்மாவின் உபதேசங்களை கேட்ட பின் வியாச முனிவர் பூலோகம் வந்து மனித, மிருக நடமாட்டம் இல்லாத ஒரு வனத்தில் விநாயகப் பெருமாளுடைய ஏகாக்ஷர மந்திரத்தை தோத்தரித்த வண்ணம் பன்னிரண்டு வருஷங்கள் கடும் தவம் இருந்தார். விநாயகர் அவருக்கு காட்சி தந்து அருளினார். அவருடைய பேரருளை பெற்ற வியாச முனிவர் உலகோர் வியக்கும் வண்ணம் பதினெண் புராணங்களையும் குறைவின்றி இயற்றினார். இதிலிருந்து மேற்கண்ட ஷோடச நாமங்களை பகவான் பிரம்மாதான் முதன் முதலில் கூறினார் என்பது தெரிகிறது.

விநாயகர் அவதரித்த விநாயகர் சதுர்த்தி தினமான 22.08.2020 சனிக்கிழமை அன்று விரதமிருந்து நாமும் விநாயகரை பூஜித்து மேன்மையடைவோம். நம் வாழ்வில் எந்த இடையூறும் ஏற்படாது.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

G. SIVAGAMASUNDARI
99940 89133



N. GURUMURTHY
99940 89140

**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**

## மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

### ஒன்றே பலவாக



திருவிச நல்லூர் அய்யாவாள் என்று ஒரு மஹான் இருந்தார். ஸ்ரீதர வெங்கடேசுவரர் என்பது அவர் பெயர். ஆனால் அவர் இருந்த ஊரை மட்டும் சொல்லி, பேரைச் சொல்லாமல் "திருவிசநல்லூர் அய்யாவாள்" என்றே ஸகல ஜனங்களும் அவரை மரியாதையோடு குறிப்பிடுவார்கள். சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன் இருந்தவர். பகவந்நாம போதேந்திராளின் மூத்த "கான்டெம்பரரி" (சமகாலத்தவர்). போதேந்திராள் விசேஷமாக ராம நாமாவையும், கோவிந்த நாமாவையும் பிரசாரம் செய்து வந்தார். அதே சமயத்தில் அய்யாவாள் சிவ நாமாவின் மகிமையைப் பரப்பி வந்தார். இரண்டு பேருக்குமே சைவ - வைஷ்ணவ பேதம் கிடையாது. அதனால் இருவருமே சேர்ந்துகூடத் திருவிசநல்லூரில் நாம ஸித்தாந்தத்தைப் பிரசாரம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்குள் பரஸ்பரம் அன்பும் மரியாதையும் இருந்தன. கலிகாலத்தில் கைகண்ட மருந்து எனப்படும் நாமத்தின் பிரபாவத்தை இரண்டு பேருமே நிலைநாட்டினார்கள். பஜனை சம்பிரதாயத்தில் இவர்களைத்தான் முக்கியமான ஆசார்யர்களாக ஸ்தோத்திரம் செய்துவிட்டு அப்புறம் மற்ற தெய்வபரமான நாமாவளிகள் சொல்வது வழக்கம். முதலில் போதேந்திராளைப் பற்றியும்; அப்புறம் அய்யாவாளைப் பற்றியும் குருவந்தனம் சொல்லிவிட்டுத்தான் பஜனை செய்வார்கள்.

அய்யாவாள் ஒரு சிராத்த தினத்தன்று பஞ்சமனுக்கு போஜனம் பண்ணி வைத்தார் என்பதற்குப் பிராயச்சித்தமாக அவர் கங்கா ஸ்நானம் செய்து வரவேண்டும் என்று நாட்டாண்மைக்காரர்கள் தீர்ப்புப் பண்ண, அவர் தம் வீட்டுக் கிணற்றிலேயே கங்கையைப் பொங்கவைத்தார் என்ற விஷயம் அநேகமாக எல்லாருக்கும் தெரிந்திருக்கும்.

தொடரும்....

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier





**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

உ

ஸ்ரீ குருப்யோ நம:



பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின் முதல் ஆராதனை விழா வேதபாரதி அமைப்பின் சார்பில் ஜுலை 13 முதல் 17 வரை ஆன்லைன் வழியாக நடைபெற்றது. ஸ்வாமிகள் எழுதிய 'தர்மத்தின் குரல்' புத்தக கருத்துரை ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் ஜி அவர்களால் தினமும் மாலை 6.30 மணி முதல் 7.45 மணி வரை நடத்தப்பட்டது.

கடவுள் குறித்த விளக்கமும் ஆன்மா குறித்த கருத்துரையும் மிகவும் எளிதாக புரியும் வண்ணம் எடுத்துரைத்தார்கள். 150க்கும் மேற்பட்ட அன்பர்கள் 5 நாட்களும் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள். 17-ம் தேதி ஸ்வாமிகளின் ஆராதனை முன்னிட்டு விசேஷ வழிபாடும், ஸ்வாமிகளுடைய ஸேவார்த்திரிகள், வெகுகாலம் உடன் பழகியவர்களின் அனுபவங்களை தொகுத்து இ-புக் வெளியிடப்பட்டது. டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழக பதிவாளர் டாக்டர் அஸ்வத் நாராயணன் அவர்கள் வெளியிட திருப்பூர் ஆடிட்டர் ராமநாதன் அவர்களும் வேதபாரதி பத்திரிகை பொறுப்பாளர் ஸ்ரீ சூர்ய நாராயணன் அவர்களும் பெற்றுக் கொண்டார்கள். மிகவும் அழகாக வடிவமைக்கப்பட்ட புத்தகம் ஸ்வாமிஜியுடன் ஏற்பட்ட பவித்ரமான அனுபவங்களின் தொகுப்பு புத்தகம் அச்சுப் புத்தகமாகவும் விரைவில் வெளிவர உள்ளது.

- ஆசிரியர்.

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

**2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"**



V.KRISHNAMOORTHY
Managing Trustee

**ஸ்ரீ மாதா டிரஸ்டின் நோக்கம் !**

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன் எந்நிலையிலும் ஏழைகளையும், ஏழை புற்றுநோயாளிகளையும் காப்போம். அதுவே ஸ்ரீ மாதா டிரஸ்டின் கடமை.



**இதுவே தெய்வத்தின் குரல் !**

துக்கம் எங்கே உண்டோ, அங்கே நாம் வலுவில் போய், அந்த துக்க நிவிருத்திக்கு நம்மால் ஆகக் கூடியதை எல்லாம் பண்ண முயலவேண்டும்...!








இருபது ஆண்டு காலமாக **ஏழை புற்றுநோயாளிகளை கண்ணை இமை காப்பதுபோல் காத்து வரும் ஸ்ரீ மாதா டிரஸ்ட்**

கொரோனா ஊரடங்கு காலத்தில் ஆலயங்கள் மூடப்பட்டுள்ள நிலையில் எவ்வித வருமானமும் இல்லாத ஆலய ஊழியர்களைத் தேடிச்சென்று அவர்களது பசிப்பிணி தீர்க்கும் திருப்பணியை தொடர்ந்து செய்து வருகிறது. அதன்படி, **தாம்பரம் சானடோரியத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ராமாஞ்ஜனேயர் - ஸ்ரீ வைத்தியநாதஸ்வாமி திருக்கோயில்களின்** அர்ச்சகர்களுக்கும், ஊழியர்களுக்கும் சிறிது நிதியுதவியும், மளிகைப் பொருட்கள் மற்றும் தரமான அரிசி அடங்கிய தொகுப்பும் 18.7.2020 அன்று ஸ்ரீ மாதா டிரஸ்ட் சார்பில் ஆலய வளாகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

எண்ணற்ற எளிய மக்களின் பசியாற்றிட ஸ்ரீ மாதா டிரஸ்டிற்கு நன்கொடை வழங்கி உதவுங்கள். இதன் புண்ணியம் யாவும் உங்கள் சந்ததியினரையே சேரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**நமது பிள்ளைகளுக்கு வைக்கும் காலத்தால் நிலைத்திருக்கும் நாம் சேர்த்து அழியாத, என்றென்றும் செல்வம் இது மட்டுமே!**

An Acknowledgement

Dear Shri Krishnamoorthy,
Pranams. We the Trustees of Sri Ramanjaneya Trust thank you from the bottom of our hearts for your generous donation and timely help of giving our entire staff the needy provisions and rice.

Donations to our Trust is exempted U/S. 80(G) of the Income Tax Act.

After doing this benevolent act kindly SMS your postal mailing address or kindly e-mail the donation details to enable us send our receipt.

Kindly send your contribution by
CHEQUE / NEFT / MONEY ORDER
Account Name : **SRI MATHA TRUST**
Bank Name: INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20.
Current A/c No.:163502000001090
IFSC Code: IOBA0001635

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin&Laser Clinic] Chennai-20.Tel:044-24420727, 42661687
Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044-45098647
**9500001065 / 9003247857**
vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org









# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

*வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,*
*சென்னை - 600 042.*




- *800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.*
- *சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.*
- *உறவினர்கள் தங்க - குளிருட்டப்பட்ட அறைகள்.*
- *விசாலமான கார் பார்க்கிங்.*
- *வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.*
- *நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.*
- *24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.*

தொடர்புக்கு

***48625585 / 9840545585***

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌளி பாகம் - 2 பகுதி - 47

ஒரே குடும்பத்தில் அண்ணன் அதிதிறமைசாலியாகவும், தம்பி சாதாரண நிலையில் இருப்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். வெளியாட்கள் இதைப் பார்த்து பேசுவதற்கு முன்பே பெற்றோர்கள் இந்த ஒப்பிடுதலை செய்து கொண்டிருப்பது தான் மிக மிக அதிகம்.

நிறம், குணம், படிப்பு, மார்க், பேசும் திறன், அழகு, வேறு பல திறன்கள் என்று பலவற்றில் இந்த வித்தியாசங்கள் மனிதப்பிறவிக்குள் இருக்கக்கூடிய வித்தியாசம் தானே!

ஆனால் இந்த வித்தியாசங்களுடனே வாழ்ந்து வெற்றி பெறுவது என்பது ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேல் தெளிவாகப் புரியும், ஆனால் 5 வயதிலிருந்தே இது ஒரு குழந்தைக்கு நடக்குமானால் அது வாழ்நாள் முழுவதும் அக்குழந்தையை முறித்துவிடும். தாய் தந்தையற்கு ஏதோ மனத்தாங்கல், கோபம் அதிகமாக என்ன பேசுகிறோம் என்று புரியாமல் அக்குழந்தையிடம் அந்த கோபம், இயலாமை மற்றும் ஆற்றாமையை கொட்ட, மிகுந்த கடுமையான வார்த்தைகளை உபயோகிக்கும் பழக்கம் பல பெற்றோர்களிடம் உள்ளது மிகுந்த வருத்தத்தை அளிக்கும் விஷயம் இது.

“உன் மூஞ்சிக்கு இது போதும்”, “எதுக்குடி கண்ணாடி முன்னால நின்னு அலங்காரம்? எவனை மயக்கறே? எதுக்கு வாசலில் நிக்கறே, யாரைப் பார்க்க காத்துண்டிருக்கே?” இது போன்றவார்த்தைகள் பெற்றோர்களின் பல்வேறு அவதிகளுக்கு வெளிப்பாடு. ஆனால் குழந்தைகளுக்கு இது பெரிய தலைக்குனிவு, அவமானம். இது தாங்கமுடியாத அவமானத்தை அளிக்க வல்லது.

இதை ஆங்கிலத்தில் 'Emotional Abuse' – “உணர்வுகளை காயப்படுத்துதல்” என்று கூறுவார்கள். பதின் பருவத்தில் இத்தகைய மனக்காயம் பலரை முறித்துப் போட்டுள்ளது.

*நீங்கள் ஒரு குழந்தையை மட்டம் தட்டி பேசும் பொழுது, அவன் / அவள் இடம் மிக அதிகமான குற்றஉணர்ச்சியை ஏற்படுத்துகிறீர்கள். அவர்களை சுற்றியுள்ள உலகம் அவர்களுக்கு ஏற்படுத்தும் காயங்களிலிருந்து இன்றைய குழந்தைகள் வெளிவருவது மிகக் கடினம். போட்டிகள் நிறைந்த உலகம், இதில் நல்லவர்களை இனங்கண்டு தேடிப் பிடிப்பது என்பது மிகக்கடினம்.*

*பெற்றோர்கள், ஆசிரியர்கள் இவர்களிடமிருந்து மட்டுமே தன்னம்பிக்கையை பெற்று கொள்ளும் வயது. அந்த காலத்தில் சுற்றத்தாரின் கூட்டத்தில் மட்டம் தட்ட இருவர் இருந்தால், தட்டிக் கொடுக்க இருவர் இருப்பார்கள். மிகச் சரியான 'Balance' ஆகிவிடும்.*

*இன்று அது நடக்காத விஷயம். ஒரு கடுமையான சொல், ஒரு சின்ன அவமானம், ஆசிரியர்களின் திட்டு இவை நம் எல்லோர் வாழ்க்கையிலும், சர்வசாதாரணமாக இருந்தது. ஆனால் இன்று ஒரு கடுமையான பார்வை கூட அவர்களை தற்கொலை அளவுக்கு தூண்டி விடுகிறது.*

*“தன்னையறிதல்’ எனும் ஓர் முக்கியமான விஷயத்தை இந்த வயதில் தான் தன் குழந்தைகளிடம் பெற்றோர் விதிக்க வேண்டும். தன்னம்பிக்கையை கூட்ட வேண்டிய காலகட்டம்.*

*இதை பல்வேறு பெற்றோர் அறிந்து கொள்ள வேண்டும். தோல்வியை எதிர்கொள்ளுதல், தன்னை, தன் குடும்பத்தை, தன் மதத்தை, தன் சுற்றத்தை, தன் நிலையை, தன் பெற்றோர்களை புரிந்து கொண்டால் தான் மிகச் சிறந்த மனிதனாக உங்கள் குழந்தை உருவாக முடியும்.*

*தன்னைவிட தன் குழந்தைகளுக்கு கொஞ்சம் அதிகமாகவே தெரியும் எனும் அவையடக்கத்துடன் குழந்தைகளை அணுகவும்.*

**“நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்**
**முந்து கிளவாச் செறிவு”** *(அதிகாரம் – 72; குறள் – 715)*

*தன்னைவிட அறிவு, அனுபவம் அதிகமாக உள்ள சபையில் அவர்கள் விரும்புவதற்கு முன் பேசாமல் இருக்கும் அடக்கம் நல்ல குணத்தில் மிக நல்ல குணம் என்கிறார் திருவள்ளுவர்.*

தொடரும்....

# பெண்மையைப் போற்றுவோம்

*இசையோடு இணைவோம். 0.2 - 25.07.2020 அன்று மாலை 6.00 மணி முதல் ஆன்லைன் மூலமாக திரை இசை பாடல்களில் உள்ள ராகம், அதற்கான கர்னாடக சங்கீத பாடல், பாடல்களின் ஆசிரியர் பற்றிய குறிப்பு, அதன் காலம், கர்னாடக சங்கீத பாடல்களில் உள்ள பாரதப் பண்பாடு குறித்த விளக்கமும் வேதபாரதி நங்கநல்லூர் யுவஸ்ரீ குழந்தைகளால் நடத்தப்பட்டது. மிகத்துல்லியமாகவும், நேர்த்தியாகவும் வடிவமைத்து நம் பெண்குழந்தைகள் முன்னின்று நவீன தொழில்நுட்பம் வாயிலாக பாரதப் பண்பாட்டை எல்லோருக்கும் கொண்டு சேர்த்த பணி மிகவும் பாராட்டத்தக்கது.*


உ

*ஸ்ரீ குருப்யோ நம:*

# வேதபாரதி Online வழியாக

- *ஸ்ரீ கணேஸ பஞ்ச ரத்னம் (குழந்தைகளுக்கு)*
- *ஸ்ரீ கனக தாரா ஸ்தோத்திரம் (பெரியவர்களுக்கு)*

Online *வழியாக நிறைவு பெற்றது.*

- *ஸ்ரீ அனுமன் சாலீஸா (குழந்தைகளுக்கு)*
- *ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கம் (பெரியவர்களுக்கு)*
- *வாரத்தின் 6 நாட்கள் நடந்துவருகிறது.*
- *வேத வகுப்புகள் நடைபெறுகின்றன.*

**Online *வகுப்புகளில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் வேதபாரதியை அணுகவும்.***

# "பாரத தேசப் புனித யாத்ரை"

*திருச்சி* **K.கணேசன்**

*'அத்யாயம் - 3'*

*ப்ரயாகையில் மூன்று அக்னிகளைக் கொண்டு ப்ரம்மா பெரிய யாகம் செய்ததால் இந்த இடம் ப்ரயாகம் என்பது ப்ரயாகை என்று ஆகியது. (ப்ர என்றால் பெரிய என்று பொருள்)*

*இந்த ப்ரயாகையில் கங்கை, யமுனை & சரஸ்வதி என்றமூன்று நதிகளும் சங்கமிக்கின்றன. ஆனால் கங்கையும் யமுனையும் மட்டுமே நம் கண்களுக்குத் தெரியும். சரஸ்வதி நம் கண்ணுக்குத் தெரியாமல் அந்தர்வாஹினியாக (உள்ளோட்டமாக) கீழே ஓடுகின்றது. ப்ரயாகையில் ஆண்கள் தலையை மொட்டை அடித்துக் கொண்டு, முக க்ஷவரம் செய்து கொள்ள வேண்டும் என்பது தர்ம சாஸ்த்ர விதி. இதனை ப்ரயாகை சங்கர மடம் (சிவமடம்) சாஸ்த்ரிகள் சொன்ன உடன் நான் அவரிடம் கேட்டேன்" மாமா ப்ராமணர்கள் வாழ்வில் மூன்று முறைதான் மொட்டை அடித்துக் கொள்ள வேண்டும் என்று சாஸ்த்ரம் கூறி உள்ளதே" என்றதற்கு அவர் நீ சொல்வதும் சரிதான், அது பொதுவான சாஸ்த்ர விதி. ஆனால் இது புனித காசி யாத்ரா விதி என்றும் இப்படி மொட்டை அடித்துக் கொண்டால் ஏழு தலைமுறையைச் சேர்ந்த பித்ருக்கள் நல்ல படியாக கரை ஏறுவார்கள் என்று, புஸ்தகம் எடுத்து காண்பித்து, எனக்கு நன்கு புரிய வைத்தவுடன் நான் கங்கையில், போட்டில் செல்லும் போது சிறிது குடுமி வைத்துக் கொண்டு மொட்டை அடித்துக் கொண்டேன்.*

*நானும் என் மனைவியும் திரிவேணி சங்கமத்திற்கு சென்று குளித்து தம்பதிகளாக வழிபாடு செய்தோம். போட்டில் கணவன் மனைவியைத் தன் மடியில் அமர்த்தி அவள் தலையை நன்கு வாரி பின்னலில் மூன்று கால் போட்டு தலைவாரி விட்டு, மலர் வைத்து நுனி முடியில் இரண்டு அங்குலம் கத்தரித்து அந்த தலை முடியுடன் (வேணியுடன்) குங்குமம், சந்தனம், மஞ்சள், அட்சதை, சீப்பு, கண்ணாடி, தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் மற்றும் தட்சிணை இவற்றைஒரு முறத்தில் வைத்து தானமாக பண்டாவிடம் கொடுத்தோம். மூன்று நதிகள் சங்கமிக்கும் இடத்தில் பண்டா அதனைப் போட்டவுடன் கூந்தல் விர்ரென்று நதியில் அந்தர் த்யானமாகி விடுகிறது. அத்தனை ஆயிரம் மக்கள் தினமும் இப்படி கூந்தலை கத்தரித்துப் போட்டாலும் சிறிது முடி*

கூட நீரின் மேல் மிதப்பதில்லை என்பது பார்ப்பதற்கு வியப்பாக உள்ளது. இப்படி படகிலேயே தலைப்பின்னுவதும், ஆண்களுக்கு வபனம் மற்றும் மொட்டை அடிப்பதும் முடிகிறது.

தனுஷ்கோடியிலிருந்து பூஜை செய்து எடுத்து வந்த வேணு மாதவ லிங்கத்தை திரிவேணி சங்கமத்தில் நன்கு வேண்டிக்கொண்டு, நான் ஸ்ரீருத்ரம் சொல்லியும் என் மனைவி ஓம் நமசிவாய என்று சொல்லியும், இருவரும் கங்கை நதியில் கரைத்தோம். ஸ்ரீருத்ரம் தெரியாதவர்கள் ஓம் நமசிவாய என்று சொல்லி கரைக்கலாம். ஸ்நானத்திற்குப் பின் அங்கேயே நாம் கொண்டு சென்றகேன்களில் கங்கை நீரை நிரப்பி பின் கடையில் கொடுத்தால் தாமிர செம்புகளில் அடைத்து சீல் வைத்துத் தருகிறார்கள். கங்கை நீர் காசியில் எடுக்கக்கூடாது, இங்குதான் எடுக்க வேண்டும். பிறகு மடத்திற்கு வந்து வேறு உடை மாற்றிய பின்னர் கணவன் மனைவி தாங்கள் நீராடும் போது கட்டியிருந்த புடவை & வேஷ்டியை தானம் கொடுத்து விட வேண்டும். பிறகு மடத்தில் சாஸ்த்ரிகள் துணையுடன் ஹோமம் வளர்த்து பார்வண ஸ்ராத்தம் செய்து அன்னமிட வேண்டும். இங்கும் நாங்கள் தம்பதி பூஜை செய்து சாஸ்த்ரிகளுக்கும் அவர் மனைவிக்கும புடவை & வேஷ்டி தங்கத்தாலி மற்றும் மங்கலப் பொருட்களை தட்சணையுடன் கொடுத்து நமஸ்காரம் செய்து ஆசிகள் பெற்றோம். பிறகு வேணு மாதவ ஆலயம் மற்றும் ஆதிசங்கரர் & ஹனுமான் ஆலயமும் (அலகாபாத் அட்ஷய வடம் மரம் (பதல்பூரி) கோவிலில் – கோட்டையின் உள்ளே) உள்ளது. 2011க்குப் பிறகு பொது மக்களுக்கு தரிசனம் கிடையாது. கும்பமேளாவின் போது ஒரே ஒரு நாள் மட்டும் தரிசிக்கலாம். அட்ஷய வடம் மூன்று பகுதிகளாக உள்ளது. ப்ரயாகையில் வேர் பகுதி (அடி) காசியில் மத்ய பகுதி & கயாவில் நுனிப்பகுதி இருக்கிறது. மூன்றும் ஆன்மீக ரீதியில் இணைக்கப்பட்டுள்ளது என்று சாஸ்த்ரம் கூறுகிறது. அக்ஷய வடமும் தரிசித்தோம். பிறகு நாங்களும் சாப்பிட்டு விட்டு காசிக்கு காரில் கிளம்பனோம்.

திரிவேணி சங்கமத்தில் ஸ்நானம் செய்கிறவன் தன் குடும்பத்தைச் சேர்ந்த அனைவருக்கும் நற்கதியைத் தேடித்தருகிறான் என்று புலஸ்திய மஹரிஷி மஹாபாரதத்தில் கூறுகிறார்.

ப்ரயாகையில் கணவன் தன் மனைவியை மஹாலெக்ஷ்மியாகவும் மனைவி தன் கணவனை

*மஹாவிஷ்ணுவாகவும் பாவித்து பூஜை செய்ய வேண்டும். பிறகு வயதான சாஸ்த்ரி மற்றும் அவர் மனைவிக்கு தம்பதி பூஜை செய்ய வேண்டும். அவர்களுக்கு* 9x5 *வேஷ்டி, 9 கெஜ புடவை & ரவிக்கைத் துணி, தங்கத் தாலி, வெள்ளி மெட்டி, மட்டைத் தேங்காய், வெற்றிலை பாக்கு & பிறமங்கல பொருட்கள் தக்ஷிணையுடன் தானம் செய்ய வேண்டும். இங்கு மட்டும் மனைவி தான், தானம் கொடுக்க வேண்டும். கணவன் உத்தருணியில் தீர்த்தம் போட வேண்டும். (நார்மலாக மனைவி தீர்த்தம் போட கணவன் தான் தானம் செய்வார்) கணவன் மனைவியின் நெற்றியிலும் வகிட்டிலும் குங்குமம் இட வேண்டும். மனைவி தன் மாங்கல்யத்திலும் கணவன் நெற்றியிலும் குங்குமம் இட வேண்டும். ப்ரயாகையில் ஸ்ரார்த்தம் செய்யும் போது 17 பிண்டங்கள் ஹவிஸில் (அரிசி சாதம்) உருண்டை பிடித்து, அதில் 6-பிண்டம் பிதா குடும்பம், 6-மாதா குடும்பம், 1-சகாருண்ய பித்ரு, 4 – சகல தேவதை மற்றும் தெரியாமல் விட்டுப்போன பித்ருக்களுக்கும் என மொத்தம் 17 பிண்டத்துடன் பித்ருக்களை ஆவாஹனம் செய்து தர்ப்பணம் செய்து பித்ருக்களை ப்ரீதி செய்ய வேண்டும். பிறகு அவற்றைஎடுத்து கங்கை ஜலத்தில் கரைத்து விட வேண்டும். தர்ப்பையை கங்கை நீரில் போடக்கூடாது. கரையில்தான் போட வேண்டும். (தர்ப்பை மீனின் நாக்கை அறுத்து விடுமாம் பித்ருக்கள் இங்கு மீன் உருவில் இருக்கிறார்களாம்) பிறகு சாஸ்த்ரிகளுக்கு அன்னம் இட்டு பின்னர் நாங்களும் சாப்பிட்டுவிட்டு காரில் காசி என்னும் வாரணாசி புறப்பட்டோம்.*

**ப்ரயாகையில் செய்ய வேண்டியவை :**

**1.** *மஹா சங்கல்பம்* **2.** *வேணிதானம்*

**3.** *திருவேணிசங்கம ஸ்நானம்*

**4.** *தனுஷ்கோடி மணல்– வேணுமாதவ லிங்கம் கரைத்தல்*

**5.** *கங்கை நீர் எடுத்தல் (இரண்டு சொம்பில்)*

**6.** *தீர்த்த ஸ்ரார்த்தம்*

**7.** *கங்கை பூஜை (இரண்டு சொம்பில் எடுத்தது)*

**8.** *தம்பதி பூஜை* **9.** *அன்னதானம்* **10.** *ஆலய தரிசனம்*

- *வேணிமாதவர் கோவில்*
- *பீஷ்மர் (25 அடி நீளம்) அம்பு படுக்கை சயனம், சர்ப்ப ராஜன்– வாசுகி - ஸோமச லிங்கம்*
- *வழியில் அலோபி மாதா கோவில்*
- *பரத்வாஜேசுவரர் ஆலயம்*

*தொடரும்.......*

# புரோஹிதர்

-ஆதிரையன்

## ஆணி வேர்

மன்னர்கள், ஆட்சிக் காலத்தில் மக்கள் நெறி சார்ந்து வாழ்வதற்கும் அவர்களுக்கு அறநெறிகளும், தர்மங்களும் போதிக்கவும் தேசம் முழுவதும் ஒவ்வொரு கிராமங்களிலும் புரோகிதர்களை குடியமர்த்தினர். ஏழை முதல் பெரும் பணக்காரர் வரை ஏற்றத்தாழ்வு நிறைந்த சமுதாயத்தில் புரோகிதர்களுக்கு நிலையான வருமானம் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் அவர்களுக்கு விவசாய நிலங்களும் பசுக்களும் மன்னர்களால் கொடுக்கப்பட்டது.

கிராம மக்களோடு பிணைந்துவிட்ட புரோகிதர்கள், தங்களது வேதத் தொழிலோடு விவசாயம் செய்து வந்தார்கள். பெரும்பாலான கிராமங்களில் தற்போதும் செய்து வருகிறார்கள். பெரும் உழைப்பாளிகளான இவர்கள், விவசாய வருமானத்தைக் கொண்டு பொருளாதார ஏற்றத்தை அடைந்தவர்களும் உண்டு. ஆனாலும், ஏழை, எளிய மக்கள் உட்பட அனைத்து சமுதாய மக்களுக்கும் தற்போதும் தொடர்ந்து சேவையாற்றி வருகிறார்கள்.

அதிகாலை எழுந்ததும் நித்ய கர்மாவை முடித்துவிட்டு அன்றைய தினம் இருக்கும் வேலையை கவனிக்க துவங்குகிறார்கள். முதல் நாளே அதற்கான ஆயத்தம் செய்து கொண்டு, வேலைக்கான கிராமத்திற்கு நடந்தே செல்கின்றனர். அக்காலத்தில் ‘மிதிவண்டி’’ என்பது கூட ஓரளவு வசதியுள்ளவர்களிடம்தான் இருக்கும். சில கிராமங்களுக்கு சாலை வசதி இல்லாத காரணத்தாலும் நடந்து செல்கின்றனர். அப்படி சாலை வசதி இல்லாத கிராமங்கள் இன்றும் இருக்கிறது. உதாரணத்திற்கு உளுந்தூர்பேட்டை தாலுக்காவில் உள்ள “பாதூர்’’ மற்றும் “பா.கிள்ளனூர் கிராமங்களிடையே விவசாய வயல்வெளி வரம்புகளில்தான் நடந்து செல்ல வேண்டும்.

அக்கிராமத்தை அடைந்ததும் அன்றைய தினம் உள்ள திதிகளை (திவசங்கள்) முடித்துக் கொண்டு மீண்டும் அந்த வருமான, மூட்டையை தலையில் சுமந்தவாறு வீடு திரும்புவார்கள். இதற்கிடையில் அந்த கிராம மக்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு நிதானமாக விளக்கங்களைச் சொல்லி ஆலோசனையும் கூறுவார்.

*உதாரணமாக...*

*- பங்காளி இறந்து ஒராண்டு ஆகவில்லை கோவிலுக்கு செல்லலாமா...?*

*- எங்கள் வீட்டில் திருமணம் நிச்சயம் செய்து இருக்கிறோம். திவசம் செய்யலாமா...?*

*- கொஞ்ச நாள் முன்னாலதான் எங்கவீட்ல கல்யாணம் ஆச்சு, எங்க அப்பாவிற்கு திவசம் கொடுக்கலாமா...?*

*- இப்படியாக வெள்ளந்தித் தனமாக கேட்பார்கள். அவர்கள் கேட்கும் போது அவர்கள் மொழியை (அதாவது உள்ளூர் பாஷை) கவனித்தால் தெரியும்... எந்தளவிற்கு அந்தப் புரோகிதரை அவர்கள் குடும்பத்தில் ஒருவராக அம்மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று...*

*அந்தளவிற்கு அம்மக்களோடு இவர்களது வாழ்க்கை இணைந்திருக்கிறது. இப்படியாக இல்லம் திரும்பி, ஒரு குளியலைப் போட்டு விட்டு மதிய உணவு எடுத்துக் கொண்டு அமருவார். கடிகாரத்தின் ஓசை மணி 3 என்பதை காட்டும்.*

*சிறிய ஓய்விற்கு பின் அடுத்த வேலையை தொடங்கிவிடுவார். விதை நெல்லை மூட்டைக்கட்டி குளத்தில் போடுவார்கள். அது முளைப்பு கட்டியதும் நாற்றங்காலில் விதைப்பார்கள்.*

*மூட்டையை குளத்தில் போடுவதற்கு நேரம், நாற்றாங்கால் விதைப்பதற்கு நேரம், நடவு செய்வதற்கு நாள், நேரம் இப்படி விவசாய வேலைகளோடு, பெண்பார்க்க, நிச்சயம் செய்ய, பந்தக்கால் நட, நலங்கு வைக்க கல்யாணத்திற்கு பொண்ணு புறப்பட என ஒவ்வொருவராக வரிசையாக வீட்டு வாசலில் வந்து கொண்டிருப்பார்கள்.*

*சிலமணி நேரம் காந்திருந்து கணிசமான தொகையை கட்டணமாக கொடுத்து இன்றைக்கு நகரங்களில் நாள் பார்க்கும் அதே மக்கள், சொந்த பூர்வீக கிராமம் சென்றுவிட்டால், உரிமையோடு எந்த லாப நோக்கமும், எதிர்பார்ப்பும் இல்லாமல் வாஞ்சையோடு வாழ்க்கையை விசாரித்துக் கொண்டே இப்பணியை செய்யும் புரோகிதர்களை கிராமங்களில் காணலாம்.*

*நாள் பார்த்து சொல்லும் அந்த சில மணித்துளிகளில் அந்த மொத்த குடும்பத்தையே விசாரித்துவிடுவார் புரோகிதர். அந்தளவிற்கு அக்குடும்பம் அவருக்கு பரிச்சயம்.* தொடரும் .....

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## கங்கை - பாவங்களைப் போக்கும் புண்ணிய நதி



*காசியில் ஒரு சமயம், சிவனும் பார்வதியும் ஆகாய மார்க்கமாசச் சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது கங்கையில் நீராடுவதற்காக, மக்கள் கூட்டம் ஒருவரையொருவர் முட்டிக் கொண்டு அவசரமாகச் செல்வதைப் பார்த்தாள் பார்வதி. சிவனிடம் பார்வதி, "இத்தனை மக்கள் கங்கையில் நீராடிக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் பாவம் எல்லாம் இன்றோடு தொலைந்து விடும் என்று அவர்கள் நம்புகிறார்கள். கங்கை அவர்களுடைய பாவங்களைப் போக்கும் என்பது உண்மைதானா? உண்மையென்றால், மக்கள் வேண்டுமென்றே பாவங்களைச் செய்துவிட்டு, அதன் விளைவுகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக கங்கையில் வந்து குளித்துவிடுவார்கள் அல்லவா?" என்று கேட்டாள். சிவன் அதற்கு, "நான் இதனை உனக்குப் புரிய வைக்கிறேன். ஆனால், முதலில், நீ ஒரு வயதான மூதாட்டியாய் உன் உருவை மாற்றிக் கொள். நான் உனது கணவனாக வந்து, நீரில் மூழ்குவது போல் நடிக்கிறேன். நாம் இருவரும் அப்பொழுது உதவி கேட்டு கதற வேண்டும்" என்று கூறினார். மேற்கொண்டு பார்வதி என்ன செய்ய வேண்டும் என்பதையும் சிவன் அவளுக்கு எடுத்துச் சொன்னார்.*

*அதன் பிறகு அவள் கங்கைக் கரையில் நின்று கொண்டு நீரில் மூழ்கிக் கொண்டிருந்த தன் கணவனைக் கைகாட்டி, "என் கணவரைக் காப்பாற்ற யாரும் இல்லையா?" என்று சொல்லி ஓலமிட்டாள். உடனே அங்கிருந்த ஜனங்களில் பலர், நீரில் குதித்து கிழவரைக் காப்பாற்றுவதற்காக முயன்றார்கள்.*

*- தொடரும்...*

# தர்மத்தின் குரல்

## பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

*அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

### 2.14. இன்னும் சில கேள்விகள்: (தொடர்ச்சி)

*19. ''சென்ற பிறவியின் கடைசிவிருத்திகள் நம் ப்ராரப்தமாகின்றன. அது இப்பிறவியில் நம்முடைய உடல் நலத்தையும் நோய்களையும் தீர்மானிக்கின்றன என்று சொல்லியிருக்கிறீர்கள். ப்ராரப்தத்தின் விளைவுகளான நோய்கள், மருந்துகளால் குணப்படுத்தப்பட முடியாதவை. ஜலதோஷம், அஜீர்ணம் போன்ற இன்றைய காரணங்களால் ஏற்படும் சுகவீனங்கள் தான் மருந்துகளால் குணமாகும் என்று சிலர் சொல்லுகிறார்கள். இப்பொழுது நடப்பவற்றில் எவை ப்ராரப்தத்தால் ஏற்பட்டவை, எவை தற்காலிகக் காரணங்களால் ஏற்பட்டவை என்று எப்படி அடையாளம் கண்டு கொள்ளுவது? மேலும், விஞ்ஞானம் வளர்ந்து கொண்டுவரும் இந்நாட்களில், மரபணு நோய்கள் கூடத் தகுந்த மரபணு மாற்றங்களால் குணமாக்கப்பட முடியும் என்பது நிச்சயமாகி வருகிறது. அடையாளம் காண்பதெப்படி?''*

இப்பிறவியில் வேண்டுமென்றே செய்த செயல் காரணமாக அமைய முடியாததெல்லாம் ப்ராரப்தம் எனக் கருதப்பட வேண்டும். அவ்வாறு இல்லையென்றால், அது ப்ராரப்தமாகாது. உதாரணமாக, இரண்டு நாட்களுக்கு முன்பு உணவு உட்கொண்டதில் குறை காரணமாக, வயிற்றுவலி வந்தால், அது ப்ராரப்தம் அல்ல. அவ்வாறு இல்லாவிட்டால், அது ப்ராரப்தம். அடுத்து, ப்ராரப்தத்தினால் வந்த வியாதி, தகுந்த மரபணு மாற்றத்தால் சரி செய்யப்படும் என்று கொண்டாலும், கர்மா பற்றிய சித்தாந்தம் எந்தத் திருத்தத்திற்கும் உட்படுத்தப்பட வேண்டியதல்ல. ஏனெனில், மரபணு நியதியில் மாற்றம் செய்வது, மரபணு குறைக்கக் காரணமான கர்மாவிற்கு மாற்றுக் கர்மாதான்.

"நோயாளியின் ப்ராரப்தம், மருத்துவரின் கர்மாவினால் எப்படிச்சரியாகும்?" மருத்துவருக்கு, நோயாளி தருகிற அதிகப்படியான கட்டணம் மூலமாக. "ப்ராரப்தத்தைக் கூட விஞ்ஞானம் சரி செய்ய முடியுமானால், ப்ராயஸ்சித்த புண்ய கர்மாவுக்கு என்ன அவசியம்?'

....தொடரும்

# குழந்தைகள் பகுதி

*அன்பு குழந்தைகளே, அருமை செல்வங்களே, நீங்கள் எல்லோரும் நலமாக இருக்க வேதபாரதியின் ஆசீர்வாதங்கள்.*

*“வேதபாரதி செய்திகள்'' பத்திரிகையில் பெரியவர்களுக்கான ஆன்மீக கட்டுரைகளையும், செய்திகளையும் வெளியிட்டுவருகிறோம். இப்புத்தகத்தில் குழந்தைகளுக்கு என்று ஒரு பகுதி ஆரம்பிக்க வேண்டும் என்றநோக்கத்தில் கடந்த ஜனவரி 2020 முதல்* **“குழந்தைகள் பகுதி”** *என்றதலைப்பில் ஒரு பகுதி ஆரம்பித்து குழந்தைகளுக்கு ஒரு போட்டியும் நடத்தினோம். அதில் ஏராளமான குழந்தைகள் கலந்துகொண்டார்கள். அதில் ஒரு குழந்தை போட்டியில் வெற்றிபெற்று பரிசுத் தொகையாக ரூ.1000/-வென்றார். தவிர்க்க முடியாத சில காரணங்களால் அந்த பகுதியை தொடர்ந்து நடத்த இயலவில்லை.*

*இந்த மாதம் முதல்* **“குழந்தைகள் பகுதி”** *யை மீண்டும் நடத்த தீர்மானித்துள்ளோம். தற்போது “கொரோனா” கட்டுபாடுகளால் கூரியர் சேவைகள் முழுமையாக இயங்காததால் போட்டிகள் நடத்த முடியாமல் இருக்கிறோம். ஆனால் கடந்த மூன்று மாதங்களாக குழந்தைகளுக்கு ஆன்லைனில் பல ஸ்லோகங்களைச் சொல்லிக் கொடுத்தோம். அதில் ஏராளமான குழந்தைகள் கலந்து கொண்டார்கள்.*

*இந்தமாதம் முதல் மேலும் சில மாதங்களுக்கு இந்த பகுதியில் நீங்கள் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகங்களையும் குட்டி குட்டி கதைகளையும் அளிப்போம்.*

*நாம் எந்த நல்ல காரியத்தை, ஆரம்பிப்பதானாலும் முதலில் விநாயக கடவுளைத்தான் வணங்குவோம். இந்த மாதம் விநாயகர் சதுர்த்தி வர இருப்பதால் முதலில் ஒரு விநாயகர் ஸ்லோகத்தை இங்கு அளிக்கிறோம்.*

**“பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை**
**நான்கும் கலந்துனக்கு நான் தருவேன்**
**கோலஞ்செய் துங்க கரிமுகத்து தூமணியே**
**நீ யெனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா”**

*ஔவையார் பாட்டியை உங்களுக்கெல்லாம் தெரியும். அந்த ஔவையார் தாம் இயற்றிய “நல்வழி'' என்னும் தமிழ் நீதி நூலில் முதலில் வரும் கடவுள் வாழ்த்துப் பாடல்தான் இது. இந்த பாடலில் ஔவையார் விநாயக கடவுளிடம் “அழகு மிகுந்த*

*யானை முகத்தைக் கொண்ட விநாயகக் கடவுளே நான் உனக்கு இனிய பாலையும், தெளிந்த தேனையும், வெல்ல பாகினையும், பருப்பு வகைகளையும் கலந்து தருவேன், நீ எனக்கு இயற் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்றமூன்று சங்கத் தமிழையும் தா" என்று கேட்டார்.*

*குழந்தைகளே இன்று முதல் நீங்கள் தினமும் பிள்ளையார் படத்தின் முன்பு "பிள்ளையாரப்பா ஔவையார் பாட்டி உங்களுக்கு நான்கு பொருட்களைக் கொடுத்து மூன்றைக் கேட்டார். நாங்கள் நன்றாக படிப்பதற்கு எனக்கு நல்ல அறிவையும் தா" என்று வேண்டிக் கொள்ளுங்கள்.*

*குழந்தைகளே அடுத்த மாதம் முதல் உங்களிடம் பேசுவதற்கு ஒரு தாத்தா வருவார். அவர் பெயர் "வேதபாரதி தாத்தா". அவர் உங்களுக்கு மேலும் மேலும் நல்ல ஸ்லோகங்களையும் சொல்லிகொடுத்து நல்ல கதைகளையும் கூறுவார். காத்திருங்கள்.*

*தொடரும்...*

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர*
*நிதிஉதவி செய்து வருபவர்*
**ப்ரம்மஶ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** *வேளச்சேரி*

*ஆசிரியர்.*

**சிந்தியுங்கள் .. மருத்துவக்காப்பீடு எவ்வளவு முக்கியம் என்று...**

**அன்பான வாடிக்கையாளர்களே...**
**நாங்கள் 30 நிமிடம் தங்களிடம் மருத்துவக்காப்பீடு பற்றி விளக்குவோம்... நீங்கள் 3 நொடிகளில் வேண்டாம் என்பீர்கள்**
**ஆனால்**
**கொஞ்சம் சிந்தியுங்கள்.**
**மருத்துவ காப்பீடு செய்து கொண்டு உங்கள் சேமிப்பை இழக்காமல் மருத்துவ செலவுகளை ஈடுகட்டுங்கள்**

**For Detail Contact :**

**Narayanan. S**
**Star Health Insurance**
**9360277372**

# தன்னலமற்ற சேவை



*2019-ம் ஆண்டு குஜராத்திலுள்ள ஜெயின் பாலிதானா தீர்த்-க்கு முதன் முறையாக யாத்திரை சென்றிருந்தோம். ஆலயம் மிகுந்த உயரத்தில் மலை உச்சியில் அமைந்துள்ளது. யாத்ரீகர்கள் அங்கு செல்வதற்கு டோலிவாலாக்கள் உதவிசெய்கிறார்கள். அப்படி ஒரு நபர் முதல் நாள் இரவு சுமார் எட்டு மணிக்கு, எங்களிடம் வந்து தனது தொலைபேசி எண்ணைக் கொடுத்துவிட்டுச் சென்றான். டோலி தேவையென்றால் அழைக்கச் சொன்னான். அடுத்த நாள் காலையில் என் மனைவிக்காக அந்த டோலிவாலாவை அழைத்தேன். அவன் பெயர் தம்ஜிபாய். கூலியெல்லாம் பேசி முடித்துவிட்டு சுமார் ஒன்பது மணிக்கு எங்களின் மலை உச்சி பயணம் ஆரம்பமாகியது. மிகச் சிறந்த ஆன்மீக அனுபவம் எங்களுக்குக் கிடைத்தது. பூஜை, ஆரத்தி எல்லாம் தரிசித்து முடித்துவிட்டு மாலை சுமார் ஐந்து மணிக்குத் திரும்பினோம். பேசியபடி கூலியைக் கொடுத்து அனுப்பிய பிறகுதான் சிறிது கூடுதலாகக் கொடுத்து அவனை மகிழ்வித்திருக்கலாமே என்று தோன்றியது. குற்றஉணர்வும் ஏற்பட்டது. பாலிதான அறக்கட்டளைக்கும் இந்த டோலி வாலாக்களுக்கும் இடையே சில சச்சரவுகள் இருந்து கொண்டிருக்கிறது. பெரும்பாலான (60 – 70%) டோலி*

வாலாக்களுக்கு வேலையில்லாததால் வருமானமும் இன்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் குஜராத் மாநிலத்தில் எங்கள் ஆன்மீக யாத்திரையை முடித்துக் கொண்டு சென்னை திரும்பிவிட்டோம். இப்பவும் என் மனம் அந்த டோலி வாலாவுக்கு கொஞ்சம் பணம் உதவி செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டே இருந்ததால், ஓரிரு முறைமுயற்சி செய்து அவனை தொலைபேசியில் அழைத்து அவனுடைய வங்கிக் கணக்கு விவரங்களைக் கொடுக்கச் சொன்னேன். ஆனால் அதற்கு அவன் மறுத்துவிட்டு, "நீங்கள் அடுத்த முறை இங்கு வரும்போது எனக்கு உங்கள் அன்பளிப்பைக் கொடுங்கள்" என்றான்.

பதினைந்து மாதங்கள் கழித்து, உலகமே கொரோனா தொற்று பரவுதலில் முடங்கிக் கிடக்கிறது. இந்தியா கடந்த சில மாதங்களாக ஊரடங்கு உத்தரவில் இருக்கிறது. மனிதர்கள், கொரோனா பயத்தோடு பொருளாதார பிரச்சினையையும் நினைத்து பயத்தில் மனம சோர்ந்து கிடக்கிறார்கள். நான் மீண்டும் அந்த தம்ஜிபாய் எனப்படும் டோலிவாலாவை அழைத்து நலம் விசாரித்தேன்.

நான் : எப்படி இருக்கிறீர்கள் தம்ஜிபாய்?

தம்ஜி : நாற்பத்தி ஐந்து நாட்களாய் வேலை எதுவும் இல்லை சாப்

நான் : அப்படியானால் குடும்பத்தை எப்படி கவனித்துக் கொள்கிறீர்கள்?

தம்ஜி : அரசாங்க உதவி கிடைக்கிறது, எப்படியோ சமாளிக்கிறோம்.

நான் : இப்பவாவது உங்கள் வங்கிக் கணக்கை அனுப்புங்கள் நான் உங்களுக்கு உதவி செய்ய விரும்புகிறேன்.

அவ்வாறே அவன் வங்கி விவரத்தை அனுப்பி வைக்க, நான் கொஞ்சம் பண உதவி செய்துவிட்டு, மேலும் சில நண்பர்களையும் செய்யச் சொன்னேன். அடுத்த நாள் காலையில் தம்ஜி எனக்கு போன் செய்து, வீடியோ கால் செய்யச் சொன்னான். நானும் அவ்வாறேசெய்ய, என்ன ஆச்சரியம், அங்கே ஆலயத்தில் செய்யப்படும் ஆரத்தியை லைவில் காணும்

பாக்கியம் கிடைத்தது. ஊரடங்கில் ஆலய தரிசனம், யாருக்கும் கிடைக்காத சூழலில் எங்களுக்கு அற்புத தரிசனம் கிடைக்கப் பெற்றோம். மேலும் கூடுதலாக பாலிதானாவுக்கு அப்போதுதான் விஜயம் செய்திருந்த ஜெயின் பெண் துறவியின் முதல் தரிசனமும் கிடைத்தது. அவர்கள் மதிப்பிற்குரிய சக்திவாய்ந்த மகாமங்க்ளிக் மந்திரத்தை உச்சரித்ததையும் கேட்க முடிந்தது.

இந்த ஊரடங்கு உத்தரவு நாளில், எதிர்பாராதவகையில் பாலிதானா ஆலய தரிசனம் கிடைத்த மகிழ்ச்சியில், தம்ஜிபாய்க்கு எங்கள் இதயபூர்வமான நன்றிகளைத் தெரியப்படுத்தினோம். தம்ஜிபாய் ஆலயத்திற்கு அருகே வசிக்கிறாரா என்று கேட்டோம். எட்டு கிலோமீட்டர் தொலைவில் வசிப்பதாக சொன்னார். எங்களுக்காகவே அன்று ஆலயத்துக்கு வந்தாரா என்று கேட்டோம். அதற்கு அவர் கல்யாண்ஜி ஆனந்த்ஜி' இடத்தில் நடைபெறும் அன்னதான நிகழ்ச்சிக்கு உதவி செய்வதற்காக வந்ததாகவும் அப்படியே ஆலயத்துள் நடைபெறும் ஆரத்தியை உங்களுக்கு நேரலையில் காட்டலாமே என்றும் தோன்றியது என்றான்.

இது ஒரு சாதாரண விஷயமாக சிலருக்கு தோன்றலாம். ஆனால் எங்களுக்கு இதயம் நிறைந்த நிகழ்வாக அமைந்துவிட்டது. ஸ்ரீ நம்ரமுனி குருதேவ் எப்போதும் சொல்வது என்னவென்றால், சுயநலமற்றஇறைசேவை புரிந்தோமேயானால் கண்டிப்பாக அதற்கு கடவுள் உடனடியாக பலன் நல்குவார். கீதையில் ஸ்ரீ கிருஷ்ணரும் எத்தகைய எதிர்பார்ப்பும் இல்லாமல் கடமையை ஆற்றிக்கொண்டே இருங்கள், பலன்கள் தானாகவே கிடைக்கும்" என்றுதான் சொல்லியுள்ளார்" என்பார். நான் தம்ஜிக்கு எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல்தான் என்னால் ஆன உதவியை நல்கினேன். அதற்கான சிறந்த உயர்ந்த பலனை நான் உடனடியாகவே பெறுவேன் என்று கொஞ்சமும் கூட நினைத்திருக்கவில்லை. இறையருளே!

**குஜராத் மொழியில் அமிதாப் தோஷி**

**தமிழாக்கம் : டாக்டர் ஷ்யாமா**

# ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்தரரின் திவ்ய சரித்திரம்

*சென்றமாத தொடர்ச்சி...*

*மன்னனின் புண்ய பலத்தால் பிரம்மம் விழித்து உள்ளம் வெளிப்பட்டு மன்னனைப் பார்த்தார். மன்னனைப் பார்த்து என்ன என்று சைகையால் கேட்க தங்கள் கைகளை துண்டித்து விட்டேனே என்று கூறி அந்த கையை அவரிடம் கொடுத்தான். கையை அதனிடத்தில் வைத்து தடவ, கை ஒட்டிக் கொண்டது. பிறகு அந்த முஸ்லிம் அரசன் இந்து மதத்தலைவர்களுக்கு பல சௌகரியங்கள் செய்து கொடுத்தார்..*

*சுற்றியது போதும் என தீர்மானித்துக் கொண்டு நேரே நெரூர் வந்து சேர்ந்தார். வந்தவுடன் தமது சீடர்களான புதுக்கோட்டை மஹாராஜா, தஞ்சாவூர் மஹாராஜா ஆகியோரை நினைக்க, அவர்கள் வந்தவுடன் குழி அமைக்கச் சொல்லி அதில் அமர்ந்து, யோக சமாதியில் பிரம்ம சாயுஜ்யத்தை அடைந்தார்கள். ஸதாசிவம் பிரம்மம் நெரூரில் ஜீவசமாதி அடைந்த அதே நேரத்தில் மானாமதுரை, கராச்சி ஆகிய இரு இடங்களிலும் சமாதி அடைந்ததாக கருதப்படுகிறது. இதை சிருங்கேரி ஸ்ரீ சச்சிதாநந்த சிவா அபிநவ நரசிம்ம பாரதி மஹா ஸ்வாமிகள் தமது ஸ்ரீ ஸதாசிவேந்திர பிரம்மேந்திர ஸ்தவம் என்ற ஸ்துதியில் கூறியிருக்கிறார். பிரம்மேந்திராள் இயற்றிய க்ரந்தங்களும், கீர்த்தனங்களும் பல, அவற்றுள்*

*"ஸர்வம் ப்ரஹம மயம் ரேரே, சிந்தா நாஸ்திகில தேஷாம், சிந்தா நாஸ்தி கில, கேலதிமம ஹ்ருதயே ஸ்ரீராம, பிப்ரே ராம ரஸம் ரஸனே, பஜரே ரகுவீரம்மான ஸ, மானஸ் ஸஞ்சரரே, ப்ரஹ்மணி, பஜரே யது நாதம், காயதி வனமாலி மதுரம், பஜரே கோபாலம் மானஸ" முதலிய பாடல்கள் சங்கீத வித்வான்களாகலும், பாகவத பெருமக்களாலும் பெருமளவில் பாடப்பெற்று வருகிறது.*

**ஸ்ரீராமன்,** *வேளச்சேரி.*

## வாசகர் கடிதம் :

*1. அன்புள்ள ஆசிரியருக்கு,*

*இந்த மாதம் வேதபாரதி கிடைக்கப்பெற்றேன். மிகுந்த சிரத்தையுடன் பல நல்ல, தேவையான விஷயங்களை உள்ளடக்கியது. ஸதாசிவ பிரம்மேந்திரர் திவ்ய சரித்திரம், ஸந்த்யாவந்தனம் பற்றிய செய்திகள், ஸ்ரீமத் பகவத் கீதை பாரத தேச புனித யாத்திரை போன்றவிஷயங்கள் மிகவும் பயனுள்ளவை. தங்களது முயற்சி தொடர வேண்டும். வேதபாரதி ஆன்லைனில் நடத்திய பெண்மையைப் போற்றுவோம், ஸந்த்யாவந்தன வகுப்புகள், சினிமா பாட்டுகளில் ராகம் கண்டுபிடித்தல் குறித்த செய்திகள் இடம் பெயறவில்லை. தங்கள் பணி சிறக்க வாழ்த்துக்கள்.*

**ஜெயராமன்.கி, ஸ்ரீரங்கம்.**

---


*2. காசி யாத்திரை பயணக்கட்டுரை இனிமேல் காசி யாத்திரை மேற்கொள்ள இருப்பவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.* Please accept my Hearty congrats. *நானும் என் மனைவியுடன் காசிக்கு சென்று வந்தேன். உங்கள் கட்டுரை மூலம் நான் செய்ய தவறியதை உணர்கிறேன். உதாரணத்திற்கு நாங்களும் தனியாக தான்* (Leave from office – to save six days) *விமானம் மூலம் காசிக்கு புறப்படும் முன்னும், போய் வந்த பிறகும் ராமேஸ்வரம் சென்று நீங்கள் குறிப்பிட்டுள்ளவைகளை முறையாக செய்தோம். செய்ய தவறியது தனுஷ்கோடியில் மணல் லிங்க பூஜை மற்றும் சமுத்திர ஸ்நானம் அங்கு சுற்றி பார்த்து விட்டு வந்தோம். தங்கள் கட்டுரைக்கு ஆசிரியர் அதிக பக்கம் கொடுத்தால் நன்றாக இருக்கும். நன்றி.*

*அன்புடன்* **G.நடராஜன்.**

---

*3. தற்கொலை தீர்வு அல்ல கட்டுரையை அனைத்து பள்ளிகளுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும். டாக்டர் ஷ்யாமா மேடத்திற்கு வணக்கம்.*

**சீனிவாசன்,** *சேலம்.*


MULTI-PURPOSE SURFACE CLEANSER
NSF
Dilution Ratio – 1:100
Highly Concentrated
Safer to skin
VESSEL CLEANSER
Cost/Utensil = 0.45 Paise/vessel (<1Paise/Utensil)
CARBON CLEANSER
DISINFECTANT CLEANSER
Approved by Intertek
WOPPER®
Fluid Chemistry
Paint & Printing Ink
Leather
Rubber
Automobile
Construction & Hardware
Textile
Agriculture
Domestic
Food & Hospitality
Detergents
Celebrate productivity & cleanliness
Textile | Leather | Rubber | Construction & Hardware | Agriculture
Paint & Printing Inks | Domestic | Food & Hospitality | Detergents
INDIA | UAE | SINGAPORE | QATAR | SRI LANKA
DE-SCALER
WATER TANK CLEANSER
100% organic & safe for lungs
Free from Chlorine
OVEN & GRILL CLEANSER
Less maintenance cost
Maintains aesthetics & performance of machines
URINAL CLEANSER
Dissolves uric acid salt buildup.
Eliminates rust deposits.
Preserve environmental hygiene.
Reduces maintenance cost.
Competitive cost.

# புதுவை வேதபாரதி

## ஆன்லைன் திருமண வைபவ வரன் தேர்வு செய்யும் நிகழ்ச்சியின் முன்னோட்ட விழா

*புதுவை வேதபாரதி சார்பாக ஆகஸ்ட் 15/16 நடத்தப்பட உள்ள ஆன்லைன் வழியாக திருமண வைபவ வரன் தேர்வு செய்யும் நிகழ்ச்சியின் முன்னோட்ட விழா, 12.07.2020 அன்று மாலை நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக குணச்சித்திர நடிகர் டெல்லி கணேஷ், உரத்த சிந்தனை, உதயம் ராம் ஆன்மீக சொற்பொழிவாளர் ஸ்ரீ கிருஷ்ணா ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். வேதபாரதி பொறுப்பாளர் திருமண வைபவ வரன் தேர்வு நிகழ்ச்சி செயல்முறை குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்கள்.*

உ

ஸ்ரீ குருப்யோ நம:

# வேதபாரதி புதுவை

## Online வழியாக திருமண ஏற்பாடுகள்

**நாள் : 15.08.2020, 16.08.2020**

**சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை**

*அந்தண பெண்கள், பையன்களுக்கு Online வழியாக வரன்கள் ஏற்பாடு செய்யப்பட உள்ளது.*

**ஜாதகப்பதிவு Whatsapp மூலம் அனுப்ப வேண்டிய எண்கள் :**

**94420 94380, 99870 35169, 94431 03404**

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

**Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.**

**Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071**

**Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org**

## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம் அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம் இது தான் அச்வமேதம்



*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**

# இமைப் பொழுதில் கண் முன் உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB
TRUST AND EXCELLENCE SINCE 1904

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020
Published 1-7th (1st Week) Every Month




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி,
திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார்
கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரீக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

Printed Matter

If not delivered please return to

**VEDABHARATHI**

No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.